



PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY






சென்னை மலர்: 01 இதழ்: 218 21.03.2026 சனிக்கிழமை

Chennai Volume: 01 Issue: 218 Saturday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY





# ஈரான் சிதைக்கப்படுகிறது; போர் விரைவில் முடிவுக்கு வரும்

## இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உறுதி

**டெல் அவிவ், மார்ச் 21:**

"ஈரானால்இனியுரேனியத்தை செறிவூட்டவோ அல்லது பாலிஸ்டிக் ஏவுகணைகளை தயாரிக்கவோ முடியாது. போரில் நாம் வெற்றி பெறுகிறோம், ஈரான் சிதைக்கப்படுகிறது" என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறினார்.

இதுகுறித்து ஊடகங்களிடம் பேசிய நெதன்யாகு, "முதலில், நான் உயிருடன் இருக்கிறேன் என்று சொல்ல விரும்புகிறேன். பாலிஸ்டிக் ஏவுகணைகளை தயாரிப்பதற்கான பாகங்களையும், அணு ஆயுதங்களை தயாரிக்க முயற்சிக்கும் அவர்களின் தொழிற்சாலைகளையும்தான் நாம் இப்போது அழித்துக் கொண்டிருக்கிறோம். ஈரானின் ஏவுகணை மற்றும் ட்ரோன் ஆயுதக் கிடங்கு மிகப் பெரிய அளவில் சிதைக்கப்பட்டு அழிக்கப்படும்.

இஸ்ரேல் தான் அமெரிக்காவை இந்த போருக்குள் இழுத்துவிட்டது என்பது உண்மையில்லை. அதிபர் டொனால்டு ட்ரம்புக்கு என்ன செய்ய வேண்டும் என்று யாராவது சொல்ல முடியும் என உண்மையிலேயே நீங்கள் நினைக்கிறார்களா?. அமெரிக்காவுக்கு எது நல்லது என்று அவர் நினைக்கிறாரோ, அதன் அடிப்படையிலேயே எப்போதும் அவர் தனது முடிவுகளை எடுக்கிறார்.

அதிபர் ட்ரம்ப்புடன் நெருங்கிய ஒருங்கிணைப்பிலும், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு இடையேயான நெருங்கிய ஒருங்கிணைப்பிலும், எங்கள் ராணுவங்கள், உளவுத்துறை ஆகியவற்றின் ஒருங்கிணைப்பின் மூலம், நாங்கள் மின்னல் வேகத்தில் இலக்குகளை அடைந்து வருகிறோம்.

இந்தப் போரில் அமெரிக்க - இஸ்ரேல் கூட்டாண்மை மிகவும் முக்கியமானது. நாங்கள் முழு மத்திய கிழக்கையும் பாதுகாக்கிறோம். மேலும், முழு உலகத்தையும் பாதுகாக்கிறோம் என்று நான் துணிந்து கூறுவேன்.



> ஈரானின் ராணுவ உள்கட்டமைப்பு கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. போரில் நாம் வெற்றி பெறுகிறோம், ஈரான் சிதைக்கப்படுகிறது. தற்போது ஈரானை யார் நடத்துகிறார்கள் என்று எனக்கு உறுதியாக தெரியவில்லை.

ஈரான் விஷயத்தில் நானும் ட்ரம்ப்பும் ஒரே நிலைப்பாட்டில் இருக்கிறோம் உலகம் ட்ரம்ப்புக்கு மிகவும் நன்றிக்கடன் பட்டுள்ளது.

ட்ரம்ப்பின் கோரிக்கையைத் தொடர்ந்து, ஈரானின் முக்கிய எரிவாயு வயல்கள் மீதான தாக்குதல்களை இஸ்ரேல் நிறுத்தி வைக்கும்.

முதல் உண்மை, தெற்கு பார்ஸ் எரிவாயு வளாகத்துக்கு எதிராக இஸ்ரேல் தனியாகவே செயல்பட்டது. இரண்டாவது உண்மை, எதிர்காலத் தாக்குதல்களைத் தள்ளிப்போடுமாறு அதிபர் ட்ரம்ப் எங்களிடம் கேட்டுக்கொண்டார், நாங்கள் தள்ளிப்போட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஈரானின் ராணுவ உள்கட்டமைப்பு கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

போரில் நாம் வெற்றி பெறுகிறோம், ஈரான் சிதைக்கப்படுகிறது. தற்போது ஈரானை யார் நடத்துகிறார்கள் என்று எனக்கு உறுதியாகத் தெரியவில்லை.

ஈரான் உயர் அதிகாரிகளிடையே மிகுந்த பதற்றம் நிலவுகிறது. போர் நாம் எதிர்பார்ப்பதை விட விரைவாக முடிவுக்கு வரும்." என்று அவர் கூறினார்.

# பிரான்ஸ், மலேசியா, ஓமன், ஜோர்டான் தலைவர்களுடன் பிரதமர் மோடி முக்கிய பேச்சுவார்த்தை

**புதுடெல்லி, மார்ச் 21:**

அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப்படைகள் மற்றும் ஈரான் ராணுவத்துக்கு இடையிலான போரால் உலகம் முழுவதும் எரிபொருள் விநியோகம் கேள்விக்குறியாகி உள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக பிரதமர் மோடி நேற்று முன்தினம் ஐக்கிய அரபு அமீரக அதிபர் முகமது பின் ஜாயத் அல்நயான், குவைத் பட்டத்து இளவரசர் ஷேக் சபா அல் காலித் ஆகியோருடன் தொலைபேசியில் ஆலோசனை நடத்தினார்.

இதைத் தொடர்ந்து பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மெக்ரானுடன் மோடி நேற்று தொலைபேசியில் பேச்சுவார்த்தை நடத்தினார். இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்ட பதிவில், 'மத்திய கிழக்கு நிலவரம் குறித்து பிரான்ஸ் அதிபருடன் கலந்து பேசினேன். அங்கு பதற்றத்தை தணிக்க வேண்டும். போரை நிறுத்த அமைதிப் பேச்சுவார்த்தை, ராஜ்ஜியரீதியான நடவடிக்கைகளை தொடங்க வேண்டும் என்று வலியுறுத்தினேன். அங்கு அமைதியை ஏற்படுத்த நானும், பிரான்ஸ் அதிபரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்' என்று தெரிவித்துள்ளார்.

மலேசிய பிரதமர் அன்வர் இப்ராகிம் உடன் பிரதமர் மோடி நேற்று தொலைபேசியில் ஆலோசனை நடத்தினார். ஓமன் நாட்டின் சுல்தான் ஹைதம் பின் தாரிக் உடனும் மோடி தொலைபேசியில் பேச்சுவார்த்தை நடத்தினார். இது குறித்து அவர் வெளியிட்ட வலைதளப் பதிவில், 'ஓமன் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை இந்தியா வன்மையாகக் கண்டிக்கிறது.

ஓமனில் வசிக்கும் இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்ததற்காக சகோதரர் ஹைதம் பின் தாரிக்குக்கு நன்றி தெரிவித்தேன். மத்திய



கிழக்கில் அமைதியை ஏற்படுத்துவது குறித்து இருவரும் ஆலோசனை நடத்தினோம். ஹார்முஸ் ஜலசந்தியில் தடையற்ற கப்பல் போக்குவரத்தை உறுதி செய்ய இந்தியாவுடன் ஓமனும் உறுதுணையாக செயல்படும்' என்று தெரிவித்துள்ளார்.

ஜோர்டான் மன்னர் இரண்டாம் அப்துல்லாவுடன் மோடி நேற்று தொலைபேசியில் பேசினார். மத்திய கிழக்கில் பதற்றத்தை தணிப்பது தொடர்பாக அவர்கள் ஆலோசனை நடத்தினர். பிரதமர் மோடியின் சமரச முயற்சி அமெரிக்கா, இஸ்ரேல், ஈரான் நாடுகளுடன் இந்தியா நல்லுறவை பேணி வருகிறது. இதன்படி

இரு தரப்பிலும் பிரதமர் மோடியால் மட்டுமே ராஜ்ஜியரீதியில் பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்று சர்வதேச அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

"இந்தியா மிகப்பெரிய நாடு. இஸ்ரேல், ஈரான் தலைவர்களுடன் பிரதமர் மோடி தொலைபேசியில் பேச்சுவார்த்தை நடத்தினால் போரை நிறுத்த முடியும்" என்று இந்தியாவுக்கான ஐக்கிய அரபு அமீரக முன்னாள் தூதர் ஹசன் மிர்ஸா தெரிவித்தார். இதையடுத்து, பிரதமர் மோடி சமரச முயற்சியை தொடங்கியுள்ளார். இதன் ஒரு பகுதியாகவே பல நாட்டு தலைவர்களுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

# அயர்லாந்தில் சிக்கிய 220 ஏர் இந்தியா பயணிகள் மீட்பு: ரூ.20,000 கருணைத் தொகை அறிவிப்பு




**புதுடெல்லி, மார்ச் 21:**

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அயர்லாந்தின் ஷானன் நகரில் தவித்துக் கொண்டிருந்த ஏர் இந்தியாவின் சிறப்பு விமானம் வியாழக்கிழமை அதிகாலை தலைநகர் டெல்லியை வந்தடைந்தது.

கடந்த திங்கள்கிழமை, நியூயார்க்கிலிருந்து டெல்லி நோக்கி வந்து கொண்டிருந்த ஏர் இந்தியாவின் 'ஏ350' ரக விமானம் (AI102), திடீர் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அயர்லாந்தின் ஷானன் நகருக்குத் திருப்பிவிடப்பட்டது. அங்கு விமானம் தரையிறக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதிலிருந்த 220-க்கும் மேற்பட்ட பயணிகளும் ஊழியர்களும் அங்கேயே தவிக்கும் சூழல் ஏற்பட்டது.

இந்நிலையில், பயணிகளை அழைத்து வர சுவிட்சர்லாந்தின் ஜூரிச் நகரிலிருந்து 'போயிங் 787' ரக சிறப்பு விமானம் ஷானன் நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த விமானம் புதன்கிழமை பிற்பகல் இந்திய பயணிகளை ஏற்றிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டு, வியாழக்கிழமை அதிகாலை டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

ரூ.20,000 நிதியுதவி பயணிகளுக்கு ஏற்பட்ட சிரமத்தைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு நல்லெண்ண அடிப்படையில் தலா ரூ.20,000 கருணைத் தொகையை ஏர் இந்தியா வழங்கியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இன்றைய நாள்

சனிக்கிழமை
(21-03-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-7
பிறை: வளர்பிறை
திதி
திருதியை பின்னிரவு 2.27 வரை பிறகு சதுர்த்தி.
நட்சத்திரம்:
அசுவினி பின்னிரவு 2.55 வரை பிறகு பரணி
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
காலை 9.00-10.30 மணி.
எமகண்டம்
நண்பகல் 1.30-3.00 மணி.
சூலம் - கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 7-8 மணி.
மாலை 5-6 மணி

| | |
|---|---|
| மேஷம் | உயர்வு |
| ரிஷபம் | ஆதரவு |
| மிதுனம் | பணிவு |
| கடகம் | சிறப்பு |
| சிம்மம் | லாபம் |
| கன்னி | செலவு |
| துலாம் | சுகம் |
| விருச்சிகம் | வெற்றி |
| தனுசு | முயற்சி |
| மகரம் | கவனம் |
| கும்பம் | நன்மை |
| மீனம் | கடமை |

# முதலமைச்சர், எதிர்கட்சிதலைவர் ரம்ஜான் வாழ்த்து

**சென்னை, மார்ச் 21:**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ரமலான் வாழ்த்து தெரிவித்துள்ளார். அதில், "நோன்பை முடித்து, புத்தாடை அணிந்து, அன்பை அனைவரோடும் பகிர்ந்து கொள்ளும் இஸ்லாமிய உடன்பிறப்புகள் அனைவருக்கும் உங்களில் ஒருவனின் இனிய ரமலான் நல்வாழ்த்துகள்.

**எடப்பாடி பழனிசாமி**

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ரம்ஜான் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "திருக்குர்ஆன் புனித நூல் அருளப்பட்ட மேன்மைமிகு ரமலான் மாதத்தின் 30 நாட்கள் நோன்பிருந்து ரம்ஜான் பெருநாளைக் கொண்டாடி மகிழும் அன்புக்குரிய இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது இனிய ரம்ஜான் திருநாள் நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்


# உத்தராகண்ட் அமைச்சரவை விரிவாக்கம்: புதிதாக 5 எம்எல்ஏக்கள் அமைச்சர்களாக பதவியேற்பு!

**டேராடூன், மார்ச் 21:**

உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமியின் அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. புதிதாக 5 எம்எல்ஏக்கள் அமைச்சர்களாக பதவியேற்றனர்.

கடந்த 2022-ல் நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக இரண்டாவது முறையாக வெற்றி பெற்றதை அடுத்து, முதல்வராக புஷ்கர் சிங் தாமி மீண்டும் பதவியேற்றார். அவருடன் 8 பேர் அமைச்சர்களாக பதவியேற்றனர்.

சமூக நலன் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த சந்தன் ராம்தாஸ் கடந்த 2023-ல் உயிரிழந்ததை அடுத்து, அமைச்சரவையின் பலம் 8 ஆக குறைந்தது. இதன்



தொடர்ச்சியாக, நிதி அமைச்சராக இருந்த பிரேம் சந்த் அகர்வால் கடந்த ஆண்டு தனது பதவியை ராஜினாமா செய்ததை அடுத்து, அமைச்சரவையின் பலம் 7 ஆக சரிந்தது. அரசியலமைப்பு விதிகளின்படி உத்தராகண்ட் அமைச்சரவையில் அதிகபட்சமாக 12 பேர் வரை இருக்கலாம். உத்தராகண்ட் சட்டப்பேரவைக்கு அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ள நிலையில், முதல்வர் புஷ்கர் சிங் தாமி தனது அமைச்சரவையை முழு அளவில் இன்று விரிவாக்கம் செய்துள்ளார். கஜன் தாஸ், பரத் சிங் சவுத்ரி, மதன் கவுஷிக், பிரதீப் பத்ரா, ராம் சிங் கைடா ஆகிய 5 எம்எல்ஏக்கள் டேராடூனில் உள்ள மக்கள் பவனில் இன்று அமைச்சர்களாக பதவியேற்றனர்.

ஆளுநர் குர்மித் சிங், அவர்களுக்கு பதவிப் பிரமாணமும் ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். அமைச்சர்களாக பதவியேற்ற அனைவருக்கும் ஆளுநர் குர்மித் சிங்கும், முதல்வர் புஷ்கர் சிங் தாமியும் வாழ்த்து தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள், அரசு உயர் அதிகாரிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



## அமைதியும் கருணையும் நிறைந்த இனிய ரம்ஜான் நல்வாழ்த்துகள்: விஜய் வசந்த் எம்.பி

**சென்னை, மார்ச் 21:**



ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு கன்னியாகுமரி காங்கிரஸ் எம்.பி விஜய் வசந்த் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது:-

புனித நோன்பின் நிறைவை குறிக்கும் இந்த புனித நாளில் சகோதர சகோதரிகளுக்கு எனது இதயம் கனிந்த ரம்ஜான் நல்வாழ்த்துக்கள்.

நபிகள் நாயகம் அவர்கள் போதித்த மனிதநேயத்தின் உயரிய மதிப்புகள் இன்றும் நமக்கு வழிகாட்டுகின்றன. "உங்களுள் சிறந்தவர் மற்றவர்களுக்கு நன்மை செய்வவரே" என்ற அவரின் போதனை, சமூக ஒற்றுமை மற்றும் சேவை மனப்பான்மையின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறது. அந்த உயர்ந்த வழிகாட்டுதல்களை நம் தினசரி வாழ்வில் கடைப்பிடிப்பதன் மூலம், நல்லிணக்கமான மற்றும் நீதியுள்ள சமூகத்தை உருவாக்க முடியும்.

இந்த மகிழ்ச்சியான நாளில், அனைவரின் வீடுகளிலும் சந்தோஷமும் சமாதானமும் நிலைத்திருக்கட்டும். நம் சமூகத்தில் ஒற்றுமை மேலும் வலுப்பெறட்டும்.

சமூகத்தின் முன்னேற்றத்திற்காக நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை இந்த நாள் மீண்டும் வலியுறுத்துகிறது.

இந்த புனித நாளில் நாம் மேற்கொள்ளும் பிரார்த்தனைகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, உலகம் முழுவதும் அமைதியும் வளமும் நிலவ இறைவனை வேண்டுகிறேன்.

நம் நாட்டில் நல்லிணக்கம், சகிப்புத்தன்மை மற்றும் சமூக நீதி நிலைத்து, அனைவருக்கும் சமமான வாய்ப்புகள் கிடைக்கட்டும். அன்பும் அமைதியும் நிறைந்த ஈத் திருநாள் அனைவருக்கும் வளமும் நலனும் தரட்டும். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 7 தலைமுறைகளாக பாதுகாக்கப்படும் மிகச்சிறிய குர்-ஆன் - கல்லூரி பேராசிரியர்கள் ஆய்வு

**குத்தாலம், மார்ச் 21:**



மயிலாடுதுறை மாவட்டம், நீடூரில் அமீனுல்லா (வயது 65) என்பவர் வசித்து வருகிறார். இவரது வீட்டில் மிகவும் பழமையான 6 ஆயிரத்து 676 அத்தியாயங்களை கொண்ட குர்-ஆன் ஒன்று உள்ளது.

சுமார் 19 பக்கத்தில் அரபி மொழியில் எழுதப்பட்ட மிகவும் சிறிய அளவிலான வரலாற்று சிறப்புமிக்க குர்-ஆன் ஒன்று 1.5 இன்ச் அகலம், 1.75 இன்ச் நீளம் உள்ள மெட்டல் பாக்ஸில் வைத்து 7 தலைமுறைகளாக பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இந்த குர்-ஆன் 17-ம் நூற்றாண்டை சேர்ந்ததாக இருக்கலாம் என இந்திய தொல்லியல் துறை சான்று வழங்கி உள்ளது. இதனை மயிலாடுதுறை மன்னம்பந்தல் ஏ.வி.சி. கல்லூரி இயற்பியல் துறை பேராசிரியர் ராமலிங்கம் தலைமையில் தமிழ், ஆங்கிலம், வரலாறு, இயற்பியல் மற்றும் வேதியியல் துறை பேராசிரியர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

மெட்டல் பாக்ஸில் உள்ள குர்-ஆனை, காரைக்குடி சிக்கிரி, பெங்களூரு ஐ.ஐ.எஸ்.சி, ஐ.ஐ.டி, என்.ஐ.டி., பி.எஸ்.ஜி காலேஜ் ஆப் சைன்ஸ் அண்ட் டெக்னாலஜி போன்ற ஆய்வகங்களுக்கு அனுப்பி ஆய்வு செய்தததில், நுண் பிணைப்பு எழுத்து வடிவில் இந்த குர்-ஆன் எழுதப்பட்டு உள்ளது.

இந்த குர்-ஆன் வைக்கப் பட்டுள்ள மெட்டல் பாக்ஸ் 2 ஆயிரத்து 600 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையை தாங்கக்கூடிய வகையில் 78 வகையான உலோகங்களால் உருவாக்கப்பட்டது கண்டறியப் பட்டு உள்ளது. விண்கலன் வளி மண்டலத்தை கடப்பதற்கு, அதன் மீது செராமிக் தொழில்நுட்பத்தில் முலாம்பூசி பயன்படுத்துகிறார்கள்.

செராமிக் அதிக எடை கொண்டதாக இருப்பதால் விண்கலனுக்கு அதிக எரிபொருள் தேவைப்படுகிறது. அதிக வெப்ப நிலையை தாங்கக்கூடிய இந்த உலோக பெட்டி உருவாக்கப்பட்ட தொழில்நுட்பத்தை நாம் பயன்படுத்தினால் எடை குறைவான விண்கலத்தை தயார் செய்ய முடியும்.

78 வகையான உலோகங்களை எப்படி கலந்தார்கள்? என்ற தொழில்நுட்பத்தை ஆய்வு செய்ய வேண்டும். எதிர்காலத்தில் இதனை பற்றி பல மாணவர்கள் ஆராய்ச்சி மேற்கொள்ள இருப்பதால், அதை கண்டுபிடிப்பதற்கான வாய்ப்புகள் நிறைய உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## காட்பாடி தொகுதிக்கு விருப்ப மனு: முதலமைச்சர் துரைமுருகனிடம் நேர்காணல்

**சென்னை, மார்ச் 21:**



சட்டசபை தேர்தலில் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களிடம் தி.மு.க. தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அண்ணா அறிவாயலத்தில் நேர்காணல் நடத்தி வருகிறார்.

அந்த வகையில் கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் துரைமுருகனிடம் இன்று நேர்காணல் நடத்தப்பட்டது.

அமைச்சர் துரைமுருகன் வேலூர் மாவட்டம் காட்பாடி தொகுதியில் போட்டியிட விருப்ப மனு கொடுத்திருந்தார். மேலும் டாக்டர் நந்தகுமார், சிவக்குமார், முரளிபாஸ்கர் ஆகிய 4 பேரும் விருப்ப மனு கொடுத்திருந்தனர். இவர்கள் இன்று நேர் காணலில் பங்கேற்றனர்.

அமைச்சர் துரைமுருகனிடம் வெற்றி வாய்ப்பு எப்படி உள்ளது? என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டறிந்தார்.

அமைச்சர் துரைமுருகன் இதுவரை 10 தேர்தல்களில் போட்டியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தி.மு.க. கூட்டணியில் இருந்து த.வா.க. வெளியேறுகிறது

### தனித்து போட்டியிட முடிவு

**சென்னை, மார்ச் 21:**



தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றிருந்த தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன் இந்த தேர்தலில் 2 தொகுதிகளுக்கு மேல் எதிர்பார்த்தார். ஆனால் அவருக்கு ஒரு தொகுதிதான் வழங்க முடியும் என்று தி.மு.க. பேச்சுவார்த்தை குழு அறிவித்தது.

இதன் காரணமாக வேல்முருகன் அதிருப்தி அடைந்தார். கட்சியின் உயர்மட்ட குழு கூட்டத்தை கூட்டி ஆலோசித்தார். இந்த கூட்டத்தில் தமிழக வாழ்வுரிமை கட்சி தனித்து போட்டியிடுவது என முடிவு எடுக்கப்பட்டது.

இதனால் தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறும் தமிழக வாழ்வுரிமை கட்சி தனித்து போட்டியிட முடிவு எடுத்துள்ளது.

## அரசுப் பேருந்துகளை சிதைத்த தி.மு.க அரசு தான் பொறுப்பேற்க வேண்டும்! - அன்புமணி

**சென்னை, மார்ச் 21:**



பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சேலத்தை அடுத்த உத்தம சோழபுரத்தில் தாறுமாறாக ஓடிய அரசுப் பேருந்து சாலையில் வந்த வாகனங்கள் மீது மோதியதில் அவற்றில் பயணம் செய்த 7 பேர் உயிரிழந்தார்கள் என்ற செய்தியறிந்து அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன். உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈரோட்டில் இருந்து சேலம் நோக்கி சென்று கொண்டிருந்த அரசுப் போக்குவரத்துக்கழக பேருந்து உத்தமசோழபுரம் சூளைமேடு அருகே திடீரென கட்டுப்பாட்டை இழந்து சாலைத் தடுப்பைத் தாண்டிச் சென்று எதிர்த்திசையில் சென்று கொண்டிருந்த இரு சக்கர ஊர்தி மற்றும் வேன் மீது பயங்கர வேகத்தில் மோதியது. அதில் இரு சக்கர ஊர்தியில் பயணித்த இருவரும், வேனில் பயணித்த 11 மாத குழந்தை உள்ளிட்ட 5 பேரும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

பேருந்தில் பிரேக் பிடிக்காததும், ஓட்டுனரின் கட்டுப்பாட்டில் பேருந்து இல்லாததும் தான் விபத்துக்கு காரணம் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. தகுதியற்ற பேருந்துகளை இயக்கிய திமுக அரசு தான் இந்த விபத்துக்கு பொறுப்பேற்க வேண்டும்.

உயிரிழந்த 7 பேரின் குடும்பங்களுக்கும் தலா ரூ.25 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும். இந்த விபத்தில் படுகாயமடைந்த வேனின் ஓட்டுனர் மேகநாதன் உள்ளிட்ட அனைவருக்கும் தரமான மருத்துவம் வழங்கவும், அவர்களுக்கு தலா ரூ. 5 லட்சம் நிதியுதவி வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார்.

## தேர்தல் நடத்தை விதிமுறையால் செஞ்சி வாரச்சந்தையில் ஆடுகள் விற்பனை மந்தம்

**செஞ்சி, மார்ச் 21:**



விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமை வாரச்சந்தை நடைபெற்று வரும் நிலையில் சந்தையில் ஆடுகள் மற்றும் மாடுகளின் விற்பனை அதிக அளவு நடைபெறும். குறிப்பாக பண்டிகை காலங்களில் வழக்கத்திற்கு மாறாக ரூ.4 கோடி முதல் 6 கோடி வரை ஒரே நாளில் விற்பனை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நாளை ரம்ஜான் பண்டிகை கொண்டாடப்பட உள்ள நிலையில் இன்று நடைபெற்ற வாரச்சந்தையில் ஆடுகளின் விற்பனை அதிக அளவு நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் தற்போது தேர்தல் கட்டுப்பாட்டு விதிகள் அதிகளவில் உள்ளதால் வெளி மாவட்ட வியாபாரிகள் அதிகளவு பணத்தை கொண்டு வந்து ஆடுகளை வாங்க முன்வராததால் ஆட்டுச்சந்தை விற்பனையானது மந்தமாக காணப்பட்டது.

வழக்கமாக பண்டிகை காலங்களில் ரூ.4 முதல் 6 கோடி வரை விற்பனையாகும் ஆட்டுச்சந்தையில் தற்போது ரூ.1 கோடி அளவுக்கு கூட விற்பனையாகாத சூழல் ஏற்பட்டது. இதனால் விவசாயிகளும் கொண்டு வந்த ஆடுகளை குறைந்த விலைக்கு விற்பனை செய்து செல்லும் சூழல் ஏற்பட்டது. சில வியாபாரிகள் ஜிபே மூலம் பணம் தருவதாக கூறியும், அதன் விவரம் தெரியாத விவசாயிகள் ஆடுகளை விற்காமல் திருப்பி ஓட்டி சென்றது குறிப்பிடத்தக்கது.

## சேலத்தில்

## அரசு பஸ் தாறுமாறாக ஓடி விபத்து - 7 பேர் பலி



**சேலம், மார்ச் 21:**

ஈரோடு பஸ் நிலையத்திலிருந்து சேலம் புதிய பஸ் நிலையத்திற்கு அரசு பஸ் ஒன்று இன்று காலை பயணிகளை ஏற்றிக் கொண்டு புறப்பட்டு வந்தது. இந்த பஸ் சேலம் மாவட்டம் சங்ககிரி பைபாஸ் சாலையில் வந்து கொண்டிருந்தது. இன்று பகல் 11 மணி அளவில் பஸ் சேலம் அருகே உள்ள உத்தமசோழபுரம் பகுதியில் உள்ள சூளைமேடு என்ற இடத்தில் வந்தபோது பஸ் திடீரென நிலை தடுமாறி சாலையின் நடுவில் உள்ள சென்டர் மீடியனில் ஏறி பக்கத்தில் உள்ள நெடுஞ்சாலையின் குறுக்கே புகுந்தது.

அப்போது சேலம் கொண்டலாம்பட்டி புதூர் அக்ரஹாரம் பகுதியை சேர்ந்த மேகநாதன் (23) என்பவர் வாடகைக்கு ஓட்டி வந்த மினி டெம்போ மீது மோதியது. தொடர்ந்து பஸ் அந்த வழியாக வந்த இருசக்கர வாகனம் மீது மோதி சர்வீஸ் சாலையின் நடுவில் குறுக்காக நின்றது.

விபத்துக்குள்ளான மினி டெம்போ வேனில் கொண்டாலம்பட்டி பகுதியை சேர்ந்த விக்னேஷ் என்பவர் குடும்பத்துடன் மகுடஞ்சாவடி கல்பாரப்பட்டியில் உள்ள குல தெய்வ கோவிலுக்கு சென்றனர். இதில் பெண்கள் உள்பட 11 பேர் இருந்தனர். அப்போது அரசு பஸ் டெம்போ வேன் மீது மோதிய விபத்தில் விக்னேஷின் தந்தை செல்வராஜ் (50), அமுதா, முருகன், 11 மாத குழந்தை ஜீவிதா, நித்திஸ்கா (5) என்ற குழந்தை ஆகிய 5 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பலியானார்கள்.

மேலும் இரு சக்கர வாகனத்தில் அரசு பஸ் ஏறி இறங்கியதால் அதில் வந்த கொண்டலாம்பட்டி சந்தன காரன்காடு பகுதியை சேர்ந்த சண்முகம் என்பவரது மகன் மணிகண்டன் (வயது 22) மற்றும் அவரது தாய் இருசாயி (60) ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பலியானார்கள். அரசு பஸ் தறிகெட்டு ஓடி மோதிய விபத்தில் 7 பேர் உடல் நசுங்கி பலியானதால் அந்த பகுதியில் ஒரே பதற்றமாக காணப்பட்டது. அந்த வழியாக இருபுறமும் வந்த வாகனங்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டது. இதனால் சேலம்-கோவை தேசிய நெடுஞ்சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இந்த விபத்து குறித்து தெரிய வந்ததும் கொண்டலாம்பட்டி போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர்.

பின்னர் விபத்தில் இறந்தவர்களின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அரசு மருத்துவமனையில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் கண்ணீர் விட்டு கதறி அழுதது பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. மேலும் விபத்தில் காயமடைந்த 4 பேரை மீட்டு போலீசார் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த பயங்கர விபத்து காட்சிகள் அந்த பகுதியில் உள்ள ஒரு பெட்ரோல் பங்க்கில் இருந்த சி.சி.டி.வி. கேமராவில் பதிவாகி இருந்தது.

அதில் ஈரோட்டில் இருந்து வந்த பஸ் தறிகெட்டு ஓடி அடுத்த சாலையில் நுழைந்து டெம்போ மீது மோதி இருசக்கர வாகனத்தில் ஏறி, இறங்கி செல்வதும், பின்னர் சர்வீஸ் சாலையில் பஸ் நிறுத்தப்பட்டதும் பதிவாகி இருந்தது. அரசு பஸ் சர்வீஸ் சாலையில் நிற்கவில்லை எனில் எதிரே உள்ள பெட்ரோல் பங்கில் புகுந்து மிகப்பெரிய விபத்து நேரிட்டிருக்கும். இந்த பதைபதைக்கும் வீடியோ காட்சிகள் தற்போது வைரலாகி வருகிறது.

## வேலூர் மாநகராட்சி மேயர் கார் பறிமுதல்- தி.மு.க. கவுன்சிலர் உள்பட3 பேர் மீது வழக்கு பதிவு

**வேலூர், மார்ச் 21:**



வேலூர் கலெக்டர் அலுவலகம் அருகே உள்ள அம்மா உணவகம் பின்புறம் தி.மு.க. சார்பில் வேலூர் மேயர் சுஜாதா ஆனந்தகுமார் தலைமையில் இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுவதாக தகவல் கிடைத்தது.

இது பற்றி தகவல் அறிந்த அ.தி.மு.க மற்றும் பா.ஜ.க. கட்சியினர் விளையாட்டு உபகரணங்கள் வழங்க உள்ள பகுதிக்கு திரண்டு சென்றனர்.

அவர்கள் விளையாட்டு உபகரணங்கள் வழங்க கூடாது என்று கூறினர். மேலும் இது பற்றி வேலூர் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும் உதவி கலெக்டருமான செந்தில்குமாரிடம் புகார் தெரிவித்தனர்.

அவர் தேர்தல் நிலை குழு அலுவலர் சதீஷ் வேலன் தலைமையில் விரைந்து வந்தனர்.

விளையாட்டு உபகரணங்கள் வழங்க கூடாது என்று எச்சரித்தனர். உடனே காரில் வந்த மேயர் சுஜாதா ஆனந்தகுமார் மற்றும் கவுன்சிலர் சதீஷ்குமார் ஆகியோர் காரை நிறுத்தாமல் சென்று விட்டனர்.

இதுகுறித்து வேலூர் மாநகர அ.தி.மு.க செயலாளர் அப்பு கலெக்டர் அலுவலகத்தில் நடந்த அனைத்து கட்சி கூட்டத்தில் புகார் தெரிவித்தார்.

தி.மு.க.வினர் தேர்தல் விதிமுறையை கடைப்பிடிக்காமல் தற்போது விளையாட்டு உபகரணங்கள் வழங்குவது ஏற்றுக் கொள்ள முடியாது. 15-ந்தேதிக்கு முன்பு வழங்கியிருக்கலாம் என்று குற்றஞ்சாட்டினார். மேலும் இது தொடர்பான வீடியோ காட்சிகளை வெளியிட்டார்.

இந்த நிலையில் தேர்தல் நிலைக்குழு அலுவலர் சதீஷ்வேலன் வேலூர் சத்துவாச்சாரி போலீசில் புகார் செய்தார். அதில் தேர்தல் விதிமுறையை மீறி விளையாட்டு உபகரணங்கள் வழங்க காரில் மேயர் சுஜாதா ஆனந்தகுமார் வந்திருந்தார்.

அந்தக் காரை நிறுத்தி நாங்கள் சோதனை செய்ய முயன்ற போது அந்தக் கார் நிற்காமல் சென்று விட்டது என புகார் செய்தார். இதைத்தொடர்ந்து சத்துவாச்சாரி போலீசார் வேலூர் மாநகராட்சி மேயரின் காரை பறிமுதல் செய்தனர். அதனை சத்துவாச்சாரி போலீஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

இது தொடர்பாக மேயர் சுஜாதா ஆனந்தகுமார், 27-வது வார்டு கவுன்சிலர் சதீஷ்குமார், கார் டிரைவர் கோபிநாத் உட்பட 3 பேர் மீது வழக்கு பதிவு செய்தனர். இந்த சம்பவம் வேலூரில் பரபரப்பை ஏற்படுத்தியது.

## ஜனநாயகன் படம் வெளியாக தேர்தல் கமிஷன் அனுமதி அளிக்குமா? அர்ச்சனா பட்நாயக் பதில்

**சென்னை, மார்ச் 21:**



சென்னை தலைமைச் செயலகத்தில் பத்திரிகையாளர்களுக்கு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் அளித்த பேட்டி வருமாறு:-

பறக்கும் படை சோதனையின் போது பிடிக்கப்படும் பணம், பொருட்களுக்கான உரிய ஆவணங்களை காட்டினால் அப்போதே அதை திருப்பிக் கொடுத்து விடுகிறார்கள். இந்த தகவலையும் தேர்தல் கமிஷன் வெளியிடும்.

சி-விஜில் செயலியை மக்கள் பயன்படுத்த வேண்டும். தேர்தல் விதிகளை மீறும் சம்பவங்களை படம் பிடித்து அனுப்ப வேண்டும். இதை மக்களிடம் இருந்து தேர்தல் கமிஷன் அதிகம் எதிர்பார்க்கிறது. இந்த செயலியில் புகார் கூறும் யாருடைய பெயரும் வெளியில் வராது.

போலீஸ் பார்வையாளர்கள், செலவினப் பார்வையாளர்கள் அனைவரும் தமிழகத்திற்கு வந்துவிட்டனர். கடந்த தேர்தலில் நியமிக்கப்பட்ட செலவினப்பார்வையாளர்களின் எண்ணிக்கையை விட இந்த தேர்தலுக்கு கூடுதல் செலவினப் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

செலவினம் அதிகமாக செய்யப்படக்கூடிய தொகுதிகளாக 108 தொகுதிகள் முன்பு பட்டியலிடப்பட்டு இருந்தன. 2 தொகுதிக்கு ஒரு செலவினப்பார்வையாளர் என்ற அளவில் நியமிக்கப்படுவார்கள். ஆனால் இந்த முறை 151 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மத்திய அரசு முகமைகளிடம் தேர்தல் கமிஷன் கேட்டறிந்து, அதிக செலவு செய்யக்கூடிய தொகுதிகளை கண்டறிந்து, செலவினப்பார்வையாளர்களை நியமிப்பார்கள். தமிழகம் அதிக தேர்தல் செலவு செய்யும் மாநிலம் என்ற பெயர் ஏற்கனவே உள்ளது.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க மார்ச் 26-ந் தேதி வரை காலம் உள்ளது. அதுவரை வரும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு பெயர் சேர்க்கப்படும். வேட்புமனு தாக்கல் அன்று வாக்காளர் துணைப்பட்டியல் வெளியிடப்படும்.

பத்திரிகையாளர்கள், அத்தியாவசிய துறையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதால் அவர்களும் தபால் வாக்கு செலுத்தலாம். அவர்கள் தபால் ஓட்டுக்கான விண்ணப்பத்தில் சம்பந்தப்பட்ட துறையின் ஒருங்கிணைப்பு அதிகாரியின் (நோடல் ஆபிசர்) கையொப்பத்தை பெற வேண்டும்.

அந்த விண்ணப்பத்தை, ஓட்டுபோட இருக்கும் இடத்தின் தேர்தல் நடத்தும் அதிகாரியின் (ஆர்.ஓ.) கொடுத்து, அவரிடம் தபால் வாக்கை வாங்கி அங்கேயே போட்டுவிடலாம். வாக்குப்பதிவன்று பத்திரிகையாளர் கள் பணியில் இருப்பார்கள் என்பதால் அதற்கு முன்பதாகவே வாக்கு செலுத்த இந்த வசதி செய்யப்பட்டுள்ளது. அத்தியாவசிய பணிக்கான பட்டியலில் 12 துறைகளின் பணியாளர்கள் உள்ளனர். அந்த 12 துறையினரும் தபால் வாக்கு செலுத்தலாம்.

நடிகரும் த.வெ.க. தலைவருமான விஜய் நடித்துள்ள 'ஜனநாயகன்' பட வெளியீட்டிற்கு தணிக்கைக் குழுவின் ஒப்புதல் கிடைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் தற்போது அமலுக்கு வந்துவிட்டன. அவை அமலில் இருக்கும்போது. ஒரு நடிகனாகவும், கட்சித் தலைவராகவும் இருப்பவர் வேட்பாளராகிவிட்டால், அவர் நடித்த சினிமாவை வெளியிடுவதற்கு தேர்தல் கமிஷனின் ஒப்புதலை பெற வேண்டுமா? என்று கேட்கிறீர்கள். இது நல்ல கேள்விதான். ஆனால் இது முதன்முறையாக நடக்கும் சம்பவம். இதுபற்றி தேர்தல் கமிஷனிடம் கேட்டு பதிலளிக்கிறேன். இந்த விவகாரத்தில் தேர்தல் கமிஷன் முடிவெடுத்து விளக்கம் அளிக்கும்.

பதற்றமான வாக்குச்சாவடிகள் பற்றி தேர்தல் பார்வையாளர்களுடன் கலந்து பேசி முடிவு செய்யப்படும். புதிதாக தரப்படவுள்ள வாக்காளர் தகவல் சீட்டின் மேல் பகுதியில் வாக்காளரின் பாகம் எண் உள்ளிட்ட விவரங்கள் தனியாக கட்டமிட்டு காட்டப்பட்டு இருக்கும். அதை முன்புபோல் தேடி கண்டுபிடிக்க தேவையில்லை.

தேர்தல் பாதுகாப்பு பணிக்காக 50 கம்பெனி துணை ராணுவத்தினர் ஏற்கனவே தமிழகத்திற்கு வந்துள்ளனர். மேலும் 250 கம்பெனி துணை ராணுவத்தினர் வரவுள்ளனர். கடந்த தேர்தலிலும் இதே எண்ணிக்கையில் துணை ராணுவத்தினர் இருந்தனர். கூடுதலாக தேவைப்பட்டால் தேர்தல் கமிஷனிடம் கேட்டு பெறலாம். ஆனால் தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகள் இல்லை. ஒரு கம்பெனியில் 70 முதல் 90 வரை துணை ராணுவத்தினர் இருப்பார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

# செக்யூரிட்டி கார்டுகள் தேவை

கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம் கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை

அணுகவும்: 9840861539

# ADVERTISE WITH US

CONTACT US 9438610756

# WANTED: FEMALE ANCHORS

- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000

Call / Whatsapp:
7789941009
9337501889



# சிவா விஷ்ணு திருமண தகவல் மையம்

அனைத்து இனத்தவர்களுக்கும்
முதல் மணம் • மறுமணம்
பொருத்தமான ஜாதகங்கள் அனுப்பப்படும்

மணமகன் • மணமகள் தேவைப்படும் அனைவருக்கும்
நம்பகமான மற்றும் விரைவான சேவை

- ✓ அனைத்து இனத்தவர்களுக்கும் பதிவு
- ✓ ஜாதக பொருத்தம் பார்த்து அனுப்பப்படும்
- ✓ முதல் திருமணம் & மறுமணம் வசதி
- ✓ உடனடி தொடர்பு & சிறந்த பொருத்தம்

தொடர்புக்கு: 9150989424

# Special Invitation

to retired seniors house wives businessmen bankers CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate

To restart your second Innings with a career business opportunity

- Flexible timing unlimited incentive
- No target work from home training provided For successful business.

Contact Mr. Irudaya Raj
Ph.9486634780

# Vilambaram

We provide Targeted Leads to grow your buisness

Boost your business

Call:: 91 7789941009, 9337501889

www.vilambaram.com



# keerthi foundation

De Addiction Cum Rehabilitation Centre

INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers

Internship:
- Clinical Training
- Counseling Practice
- Case Work

Jobs:
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care

Call: 9841945060 | 7845027710

www.keerthifoundation.com

# WANTED

# JAY SECURITY FORCE

பணி வாய்ப்புகள்

- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை

சம்பளம்:- 12500 முதல் 20000 வரை

9791061354 - 8072969599

Head office

NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97

ADIYOGI

REAL ESTATE WHOLESALE

VADACHENNAI CALL DRIVER



ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை

_CONTACT_

8939228901

# PREMIUM LAND SALE NEAR PARANDUR AIRPORT

YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!

Location: Just 6 KM Near Parandur New Airport



Price Details
- ₹700 to ₹2200 per Sq.Ft
- Affordable & High Return Investment

Why Invest Here?
- ✓ Fast Developing Area
- ✓ Near Upcoming Airport
- ✓ Excellent Appreciation Value
- ✓ Suitable for Residential & Investment
- ✓ Easy Road Access

PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847

LIMITED PLOTS – BOOK NOW!

# WANTED

Site Supervisor required for construction work in Ambattur

Contact: 8428872887

# WANTED

Needed female staff to look after children, patients.

Contact
9150989424

# SEVEN STARS LOGISTICS PVT.LTD.

We Build Perfection.

we simplify shipping for your business

Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.



# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.

+91 44 43570909 +91 96770 88843

info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

# just499®

MLM SOFTWARE

All Types of MLM Software Solutions Available

Binary Unilevel Matrix Board Generation ROI / Investment

ONLY Rs. 499

Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

# Sri Manjal Mart

தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க

20% OFF

www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

# SADHANA DEVI.K

THE BEST CENTRE OF CAR WASH

SUPREME

Car Wash & Detailing



- Car Foam Pressure Wash
- Teflon Coating
- Ceramic Wax Treatment
- Under Chassis Painting
- Interior Foam Wash / Stain Remover
- Paint Correction / Protection

We Done Here

9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com

No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

# WANTED

M/F லோடுமேன்,பிக்கர், டிரைவர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift

7540003588

# அருள்தரும் தெய்வம்

தமிழ் மாதமிருமுறை இதழ்

என்றும் நம் இல்லங்களில்

www.arultharumdeivam.com

அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..

# WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872

## கவிதை அரங்கம்!





ஒற்றைச்சுவட்டில்
இரு உள்ளங்கள் உருகும்
சூடான இரவுகள்

நீ எங்கு இருந்தாலும்
உன் நினைவுகள்
என் அருகிலேயே
இருக்கும்
என் இதயம் எப்போதும்
உன் மடியில் இருப்பதை
உணருகிறது

காலம் செல்லலாம்
இடைவெளிகள்
உருவாகலாம்
ஆனால் என் இதயம்
எப்போதும்
உன் நினைவுகளால்
நிறைந்திருக்கும்

இதழ்களின் மௌனம்
எந்த மொழியையும் விட
இனிமையாக பேசும்

## வாழ்க்கை தத்துவம்...



அதிகம் பொறுமையுடன்
நடக்காதே பைத்தியம்
ஆகும் வரை
விட மாட்டார்கள்

எவ்வளவு கஷ்டம் வந்தாலும்
வெளிய காட்டக்கூடாது
ஏன்னா நம்மைப் பார்த்து
சந்தோஷப்பட நாலு
பேரு இருக்காங்க

எண்ணங்களில் நீ
அழகா இரு உன்
தோற்றம் எப்படி
இருந்தாலும்
கவலைக் கொள்ளாதே

## பால் குடிக்காத பூனை!



விஜய நகரத்தில் எலி மற்றும் பெருச்சாளிகளின் தொல்லை தாங்காமல் பொதுமக்கள் மிகவும் துன்புற்றார்கள். அவர்கள் அரசரிடம் சென்று முறையிட்டார்கள். குடிமக்களின் துயரை நீக்குவதற்காக, அரசர் பாரசீக நாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான பூனைக்குட்டிகளை வரவழைத்தார். வீட்டுக்கு ஒரு பூனையைக் கொடுத்து, அதற்குப் பால் ஊற்றி வளர்ப்பதற்காக ஒரு பசுவையும் இலவசமாக அளித்தார்.

எல்லோருடைய வீட்டிலும் பசுவின் பாலைக் குடித்து பூனைகள் செழிப்பாக வளர்ந்தன; எலிகளைத் துரத்திப் பிடித்து அழித்தன. ஆனால், பசுவின் பால் முழுவதையும் பூனைக்கே ஊற்றியதால் மக்கள் உணவின்றி எலும்பும் தோலுமாக மெலிந்து போயினர்.

தெனாலிராமனோ தந்திரமாகச் செயல்பட்டான். பசுவின் பாலைக் கறந்து தானும் தன் மனைவி, மக்களும் குடித்து மகிழ்ந்தான். பூனைக்கோ சூடான பாலை வைத்து அதன் நாவைச் சுட வைத்தான். இதனால் அந்தப் பூனை பட்டினியாகக் கிடந்து மெலிந்து போனது.

சில மாதங்களுக்குப் பிறகு, தான் அளித்த பூனைகளைப் பார்வையிட அரசர் எண்ணினார். ஒரு குறிப்பிட்ட நாளில் அரண்மனை வளாகத்திற்குப் பூனைகளைக் கொண்டு வருமாறு உத்தரவிட்டார். அவ்வாறே ஒவ்வொருவரும் தாங்கள் வளர்த்த பூனைகளைக் கொண்டு வந்தனர். பூனைகள் எல்லாம் கொழு கொழுவென்று வளர்ந்திருந்தன; ஆனால், அவற்றை வளர்த்தவர்களோ எலும்பும் தோலுமாகத் தெரிந்தனர்.

அரசர் ஒவ்வொரு பூனையாகப் பார்த்துக் கொண்டு வரும்போது, எலும்பும் தோலுமாக மெலிந்து போயிருந்த ஒரு பூனையைக் கண்டு, "இது யார் வளர்த்த பூனை?" என்று கேட்டார். அருகில் நின்று கொண்டிருந்த தெனாலிராமன், "மன்னா, இது நான் வளர்த்த பூனை," என்று கூறினான்.

அரசர் கோபமுற்று, "உன்னுடைய பூனைக்கு ஏன் பால் கொடுக்காமல் பட்டினியாகப் போட்டிருக்கிறாய்?" என்று கேட்டார். அதற்குத் தெனாலிராமன், "அரசே, என் பூனை பாலைக் கண்டாலே குடிக்காமல் ஓட்டம் பிடிக்கிறது. அதற்கு நான் என்ன செய்வேன்?" என்றான்.

அதைக் கேட்டு வியப்படைந்த அரசர், "பால் குடிக்காத பூனை எங்கேயாவது உண்டா? நீ கூறுவது உண்மையானால் உனக்கு நூறு பொற்காசுகள் பரிசளிப்பேன்!" என்றார். உடனே பாலைக் கொண்டு வரச் செய்து, அந்தப் பூனையின் முன்னே வைக்கும்படி கட்டளையிட்டார்.



## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

*தினேஷ் எப்போதும் CHAIR-லயே உட்கார்ந்துக்கிட்டே இருப்பானாம் ஏன்.?*

*விடை: ஏன்னா அவன் (CHAIR)MAN ஆம்.*

*தண்ணீயே இல்லாத கடல் எங்கே இருக்கு..?*

*விடை: வேறெங்க MAP -ல தான் இருக்கும்.*



## தினம் ஒரு சமையல்



### பாசிப்பருப்பு பாயாசம்

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| *பாசிப்பருப்பு* | *-1கப்* |
| *வெல்லம்* | *-3/4கப்* |
| *முந்திரி பருப்பு, திராட்சை* | *-தேவையானஅளவு* |
| *தேங்காய் துருவல்* | *-3டேபிள்ஸ்பூன்* |
| *காய்ச்சிய பால்* | *-1/2கப்* |
| *ஏலக்காய்* | *-1* |
| *நெய்* | *-2டேபிள்ஸ்பூன்* |

செய்முறை:



பாசிப்பருப்பை லேசாக வறுத்து எடுத்து பின்னர் குக்கரில் சேர்த்து தண்ணீர் ஊற்றி 4 விசில் விட்டு வேக வைத்து எடுக்கவும்.

பிறகு அடுப்பில் பாத்திரத்தில் வெல்லம், ஏலக்காய் சேர்த்து கலந்து விட்டு கரைத்து வடிகட்டி எடுத்து கொள்ள வேண்டும்.

பிறகு வேக வைத்த பருப்பை இதில் சேர்த்து கலந்து விட்டு சிறிது நேரம் கலந்து விடவும்.பிறகு தாளிப்பு கரண்டியில் நெய் விட்டு முந்திரி பருப்பு திராட்சை சேர்த்து பொன்னிறமாக வறுத்து எடுக்கவும்.தேங்காய் துருவல் சேர்த்து வதக்கி எடுக்கவும்.

பிறகு பருப்புடன் சேர்த்து கலந்து விட்டு பால் சேர்த்து கலந்து விடவும்.

சிறிது நேரம் கழித்து சூடாக எடுத்து பரிமாறவும். சுவையான பாசிப்பருப்பு பாயாசம் தயார். நன்றி

## விளாம்பழம் பயன்கள்




விளாம்பழத்தை ஆங்கிலத்தில் உட் ஆப்பில் என அழைப்பார்கள். இந்தியாதான் இதன் தாயகம். அதன் பிறகு தான் இலங்கை, தைவான், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் பரவலாக விளைவிக்கப்பட்டது. காடுகளில் அதிகம் காணப்படும் இம்மரம் தோட்டங்களிலும், கோயில்களிலும் கூட வளர்க்கப்படும். காயாக இருக்கும்போது துவர்ப்பு சுவையிலும், பழுத்த பின் புளிப்பு துவர்ப்பு இரண்டும் கலந்த சுவைகளும் இருக்கும். கடினமாக இருக்கும் விளாம்பழத்தின் ஓடுகளைப் பயன்படுத்தி கைவினைப் பொருட்கள் செய்வார்கள். இது தவிர இதில் ஏராளமான மருத்துவ நன்மைகள் நிறைந்துள்ளது.


விளாம்பழத்தில் உடலுக்குத் தேவையான விட்டமின் ஏ, விட்டமின் பி2 மற்றும் சுண்ணாம்புசத்து அதிகம் இருப்பதால் எலும்பு மற்றும் பல் பலமடைய உதவுகிறது. மேலும் விளாமரத்தின் பிசினை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைப்படுதல், ரத்தப்போக்கு போன்ற பிரச்சனைகள் குணமடையும்.

வாய்ப்புண் உள்ளவர்கள் விளாங்காயை தயிருடன் சேர்த்து சாப்பிட்டால் சரியாகும். அத்துடன் அல்சர் பாதிப்புகளும் குறையும். விலங்காயை நன்கு அரைத்து மோரில் கலந்து குடித்தால் பேதி குணமாகும்.

விளாமரத்தின் பட்டையை பொடியாக்கி, தண்ணீரில் கொதிக்க வைத்து கசாயம் போல குடித்தால், மூச்சுத் திணறல் வறட்டு இருமல் போன்றவை குணமாகும். பிரசவித்த பெண்களுக்கு உடல் உறுப்புகளுக்கு இது அதிக ஆற்றலைக் கொடுக்கும்.

விளாம்பழ பிசினை உலர்த்தி, தூள் செய்து, காலை மாலை என ஒரு சிட்டிகை வெண்ணெயுடன் கலந்து சாப்பிட்டால், உள்ளுறுப்பு ரணம், நீர் எரிச்சல், வயிற்றுப்போக்கு, மாதவிடாய் பிரச்சனைகள் எல்லாம் குணமாகும்.

பித்தம் சம்பந்தமான பாதிப்பு உள்ளவர்கள் விளாம்பழத்துடன் வெள்ளம் சேர்த்து ஒரு மாதம் வரை சாப்பிட்டு வந்தால் எல்லாம் சரியாகும். இதனால் பித்தாத்தால் ஏற்படும் கண்பார்வை மங்கல், தலைவலி, வாயில் கசப்பு, அதிக வியர்வை, நாவில் ருசியற்ற உணர்வு போன்றவை குணமாகும்.




## நடிகையை தனது காலில் ஏறி நிற்க சொன்ன நடிகர் உதயநிதி ஸ்டாலின்.. படப்பிடிப்பில் நடந்த சம்பவம்



ஒரு கல் ஒரு கண்ணாடி படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் ஹீரோவாக அறிமுகமானவர் உதயநிதி ஸ்டாலின். இதன்பின் நகைச்சுவை கலந்த ஆக்ஷன் திரைப்படங்களை தேர்ந்தெடுத்து நடித்து வந்தார்.

ஆனால், அரசியலில் களமிறங்கிய பின் சமூக அக்கறையுடன் நெஞ்சுக்கு நீதி, மாமன்னன் போன்ற படங்களில் நடித்தார். மாமன்னன் தனது கடைசி படம் என கூறி, சினிமாவிலிருந்து விலகி தற்போது துணை முதலமைச்சராக உள்ளார்.

சினிமா பிரபலங்கள் தங்களது படப்பிடிப்பு அனுபவங்களை அவ்வப்போது பேட்டிகளில் பகிர்ந்துகொள்வார்கள். அப்படி, தற்போது ஜீ தமிழ் வாரிசு சீரியல் கதாநாயகி ஸ்வேதா சமீபத்திய பேட்டி ஒன்றில், இப்படை வெல்லும் படத்தில் உதயநிதி ஸ்டாலின் உடன் இணைந்து நடித்த அனுபவத்தை பகிர்ந்துள்ளார்.

இதில், "இப்படை வெல்லும் படத்தின் படப்பிடிப்பில், கோவிலுக்கு மேல், கலசத்திற்கு அருகில் உள்ள இடத்தில் நின்றுகொண்டு படப்பிடிப்பு நடந்தது. அது ட்ரோன் ஷாட், யாருமே அங்கு இல்லை. நான், ராதிகா அம்மா, உதயநிதி ஸ்டாலின் சார் மற்றும் என் தங்கையாக நடித்தவர் மட்டும்தான் இருந்தோம். காலில் செருப்பு இல்லை, செம வெயில், செமயா கொதிக்குது, என்னால் நிற்க முடியவில்லை. இதை பார்த்துவிட்டு, 'என் கால் மீது ஏறி நில்' என உதயநிதி ஸ்டாலின் சொன்னார். இல்ல சார் வேண்டாம் என கூறினேன். ஆனால் என்னால் வெயில் சூட்டை தாங்க முடியவில்லை. 'இல்ல மா பரவாயில்லை என் கால் மீது ஏறி நில்லுங்க' என மீண்டும் சொன்னார்" என படப்பிடிப்பு தளத்தில் நடந்த அனுபவத்தை சமீபத்திய பேட்டியில் பகிர்ந்துகொண்டார் நடிகை ஸ்வேதா.



இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தனது Stunning லுக்கில் எடுத்துக்கொண்ட போட்டோஷூட் புகைப்படங்களை பதிவு செய்துள்ளார். இந்த புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றன. இதோ பாருங்க:

## நடிப்புக்காக கிண்டல் செய்யப்பட்ட ராஷ்மிகா.. திருமணத்திற்கு பின் மேடையில் மனம் திறந்து பேசிய நடிகை



இந்திய அளவில் முன்னணி நடிகையாக வலம் வருபவர் நடிகை ராஷ்மிகா மந்தனா. இவர் நடிப்பில் அடுத்ததாக ரணபலி, Cocktail 2, மைசா, அல்லு அர்ஜுன் 22, அனிமல் பார்க் மற்றும் புஷ்பா 3 ஆகிய திரைப்படங்கள் வெளிவரவுள்ளன.

கடந்த மாதம் நடிகை ராஷ்மிகா மந்தனாவிற்கும் நடிகர் விஜய் தேவரகொண்டாவிற்கும் பிரம்மாண்டமான முறையில் திருமணம் நடைபெற்றது.

இந்த நிலையில், திருமணத்திற்கு பின் நடிகை ராஷ்மிகா மந்தனாவிற்கு சிறந்த நடிகை என்கிற விருது கிடைத்துள்ளது. சமீபத்தில் Telangana Gaddar Film Awards நடைபெற்றது. இதில் 'தி கேர்ள் ஃபிரெண்ட்' திரைப்படத்திற்காக நடிகை ராஷ்மிகா மந்தனாவிற்கு சிறந்த நடிகை விருது கிடைத்திருக்கிறது.

விருது பெற்ற நடிகை ராஷ்மிகா அந்த மேடையில் பேசியது, "ஒரு காலத்தில் என்னுடைய நடிப்புக்காக கிண்டல் செய்யப்பட்டேன். இப்போது என் நடிப்புக்காக விருது கிடைத்துள்ளது, மிகப்பெரிய பாதையை கடந்து வந்ததை போல் உணர்கிறேன். 'தி கேர்ள் ஃபிரெண்ட்' திரைப்படத்திற்காக விருது கிடைத்துள்ளது என்பது மிக சிறப்பானது, ஏனென்றால் அது போன்ற நிறைய படங்கள் வருவதை ஊக்குவிக்கும், இப்படத்தை கொடுத்த ராகுலுக்கு நன்றி" என கூறியுள்ளார்.

# புண்ணியம் தேடுவோம்

டிசம்பர் மாதம் முதல் நாள், தமிழ் மாதம் கார்த்திகை 16 ம் நாள் விருச்சிக மாதம் 15 ம் நாள் குருவாயூர் ஏகாதசி கைசிக ஏகாதசி ,மோக்ஷ ஏகாதசி, பிரபோதினி ஏகாதசி என பல பெயர்களில் பக்தர்களால் அனுசரிக்கப் படும் தினம்.

ஏகாதசி என்று அழைக்கப்படும் நாளானது, பௌர்ணமி மற்றும் அமாவாசை நாட்களுக்கு இடையிலே பதினொன்றாம் நாளைக் குறிப்பதாகும். இது பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை வரும், முக்கியமான விரத நாளாகும். வருடத்தில் மொத்தம் 24 ஏகாதசிகள் நிகழ்கின்றன.
குருவாயூர் ஏகாதசி நாள் கார்த்திகை/விருச்சிக மண்டல காலத்தில் வரும் ஏகாதசியாகும். இந்த புண்ணிய தினத்தின் முக்கியத்துவத்தைக் காண்போம்.

க்ஷீரசாகரத்தில் அனந்தசயனனாக பள்ளி கொள்ளும் பகவான் யோகநித்திரையிலிருந்து எழுந்து லஷ்மி தேவியோடு நம்மை அனுக்கிரகிக்கும் மகா புண்ணிய தினம்.
அறநெறியையும், அறநெறியில் உள்ளவர்களையும் காக்கவும்,அதர்மத்தையும், அதர்ம வழியில் உள்ளவர்களையும் அழிக்கவும் பகவான் அவதாரம் செய்கிறார்.



அவ்வண்ணமே பூரண அவதாரம் எடுத்த ஸ்ரீகிருஷ்ண பகவான் பல அவதார லீலைகள் செய்த புண்ணிய தினம்.

பகவத்கீதையை அருச்சுனனுக்கு பகவான் உபதேசம் செய்த புண்ணிய தினம்.

தேவேந்திரன் சுரபியாகிய காமதேனுவுடன் பிருந்தாவனத்தை அடைந்து பகவானை துதித்தும், காமதேனு பால் சுரந்து கோவிந்தாபிஷேகம் நடத்திய மகா புண்ணிய தினம்.
குருவாயூர்க்ஷேத்திரப் பிரதிஷ்டா தினம்.

அத்வைதத்தின் குருவும், சைவ அவதாரமுமான ஆதிசங்கரர் குருவாயூர் கோவிலில் வந்து, இன்று நடைபெறும் பூஜா நிஷ்டைகளை உருவாக்கிக் கொடுத்த மகா புண்ணிய தினம்
குருவாயூர் கோவிலில் தாந்த்ரீக சடங்குகள் ஒன்றும் இல்லாமல் பகவான் பக்த ஜனங்களை நேரில் வந்து அனுக்கிரகம் செய்ய வெளியே வரும் புண்ணிய தினம்.

பக்தரில் உத்தமர்களாகிய மேல்பத்தூர், பூந்தானம், ஆதிசங்கரர், குரூரம்மா, வில்வமங்கலம் சுவாமிகள் போன்றவர்களுக்கு பகவத் தரிசனம் கொடுத்த மகா புண்ணிய தினம்.

செம்பை வைத்தியநாத பாகவதருக்கு இழந்த குரலை மீண்டும் பகவான் அருளிய மகா புண்ணிய தினம்.
செம்பை வைத்தியநாத பாகவதர் தனது சீடர்களுடன் குருவாயூரில் வந்த சங்கீத ஆராதனை நடத்திய மகா புண்ணிய தினம்.
இன்றும் ஆராதனை நடந்து வருகிறது.

குருவாயூர் ஶ்ரீகோவில் இன்று முழுவதும் தரிசனத்துக்காக திறந்திருக்கும் புண்ணிய தினம்.

பக்தர்கள் ஆராதிக்கும் , பகவானின் அருள் கொண்ட குருவாயூர் கேசவன் என்னும் யானை பகவானை அடைந்த தினம்.

மேல்பத்தூர் பட்டத்திரிப்பாடு தான் எழுதிய நாராயணீயம் என்னும் கிரந்தத்தை பகவானுடைய சன்னதியில் சமர்ப்பணம் செய்த மகா புண்ணிய தினம்.

கார்த்திகை — வளர்பிறை ஏகாதசி — பிரபோதின ஏகாதசி-- கைசிக ஏகாதசி — அனைத்துப் பழங்களையும் பகவானுக்கு நிவேதனம் செய்து நவ வித பக்தியால் இறைவனை வேண்டிக் கொண்டால் இறையருளுடன் மங்கல வாழ்வு மலரும்.

ஏகாதசி விளக்கு என பதினைந்து நாட்கள் குருவாயூர் கோவிலில் கோலாகலமாக நடக்கும் இந்த குருவாயூர் ஏகாதசி மகத்துவம் அறிந்து, விரத விதிகளை பாராட்டி அனுசரித்து
'நான்''எனது'என்ற அகந்தை இல்லாமல் 'சர்வம் கிருஷ்ணார்ப்பணம்' என்ற கோவிந்த நாமத்தை வணங்கி நற்கதி பெறுவோம்.



சோபனா விச்வநாதன்.

# தினம் ஒரு தலைவர்கள் சாவித்ரி தேவி முகர்ஜி வரலாறு

சாவித்ரி தேவி முகர்ஜி 1905 ஆம் ஆண்டு லியோனில் மாக்சிமியானி ஜூலியா போர்டாஸ் என்ற பெயரில் பிறந்த சாவித்ரி தேவி, கிரேக்க மற்றும் இத்தாலிய வம்சாவளியைச் சேர்ந்த பிரெஞ்சு குடிமகனான மாக்சிம் போர்டாஸ் மற்றும் ஜூலியா போர்டாஸ் (நீ நாஷ்) என்ற ஆங்கிலப் பெண்ணின் மகள் ஆவார் . குழந்தை பருவத்திலிருந்தே மற்றும் அவரது வாழ்நாள் முழுவதும், அவர் விலங்கு உரிமைகளுக்காக தீவிர ஆதரவாளராக இருந்தார் . அவரது ஆரம்பகால அரசியல் தொடர்புகள் கிரேக்க தேசியவாதத்துடன் இருந்தன . தனது இளமை பருவத்தில் அவர் ஜெர்மன் தத்துவம் மற்றும் ஜெர்மனியில் ஆர்வம் கொண்டிருந்தார்; முதலாம் உலகப் போரின் முடிவில் ஜெர்மனியின் சிகிச்சையாலும் , கிரேக்க அகதிகளை ஒரே நேரத்தில் நடத்தியதாலும் அவர் கலக்கமடைந்தார். ஜெர்மனியின் தோல்விக்கு யூதர்களைக் குற்றம் சாட்டினார்.

கிரீஸ் மற்றும் பிரான்சில் கல்வி கற்ற போர்டாஸ், தத்துவம் மற்றும் வேதியியலைப் பயின்றார், லா சிம்ப்ளிசிட் கணிதமேடிக் என்ற தனது ஆய்வறிக்கையின் அடிப்படையில் லியோன் பல்கலைக்கழகத்தில் தத்துவம் மற்றும் அறிவியலில் இரண்டு முதுகலைப் பட்டங்களையும் , வேதியியலில் முனைவர் பட்டத்தையும் பெற்றார் . அடுத்து அவர் கிரேக்கத்திற்குச் சென்று, புகழ்பெற்ற இடிபாடுகளை ஆய்வு செய்தார். இங்கே , ஹென்ரிச் ஷ்லிமேன் அனடோலியாவில் ஸ்வஸ்திகாக்களைக் கண்டுபிடித்ததைப் பற்றி அவர் அறிந்தார் . பண்டைய கிரேக்கர்கள் ஆரிய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் என்பது அவரது முடிவு . அவரது முதல் இரண்டு புத்தகங்கள் அவரது முனைவர் பட்ட ஆய்வுக் கட்டுரைகள் : எஸ்ஸை-கிரிட்டிக் சுர் தியோஃபில் கைரிஸ் மற்றும் லா சிம்ப்ளிசிட் கணிதமேடிக் . பைபிள் மீதான வெறுப்பாலும், பின்னர் பாலஸ்தீனத்தில் சியோனிச நடவடிக்கைகளாலும் செல்வாக்கு பெற்ற அவர், இளம் வயதிலேயே யூத எதிர்ப்பாளராக மாறினார். 1928 ஆம் ஆண்டின் முற்பகுதியில், போர்டாஸ் தனது பிரெஞ்சு குடியுரிமையைத் துறந்து கிரேக்க குடியுரிமையைப் பெற்றார் . 1929 ஆம் ஆண்டில் (அரேபியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையிலான மோதல் ஒரு



வருடம்) அவர் லென்ட் காலத்தில் பாலஸ்தீனத்தின் பிரிட்டிஷ் ஆணைக்கு ஒரு யாத்திரையில் சேர்ந்தார், இது அவரது நம்பிக்கைகளை வலுப்படுத்தியது. போர்டாஸ் தனது யூத எதிர்ப்பில் பல்வேறு பிரெஞ்சு அறிவுஜீவிகளாலும் செல்வாக்கு பெற்றார், அவர்களுடன் யூத எதிர்ப்பு மிகுதியாக இருந்தது; அவர் குறிப்பாக எர்னஸ்ட் ரெனனால் பாதிக்கப்பட்டார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு , அவர் 1945 ஆம் ஆண்டு சாவித்ரி தேவி முகர்ஜி என்ற பெயரில் இந்தியாவைச் சேர்ந்த ஒரு பிரிட்டிஷ் குடிமகனின் மனைவியாக, பிரிட்டிஷ் இந்திய பாஸ்போர்ட்டுடன் இங்கிலாந்து சென்றார் . அவர் இங்கிலாந்தில் சிறிது காலம் தங்கினார், பின்னர் பிரான்சில் உள்ள தனது தாயாரைச் சந்தித்தார், அவருடன் பிரெஞ்சு எதிர்ப்புக்கு பிந்தையவரின் ஆதரவு குறித்து அவர் சண்டையிட்டார். பின்னர் அவர் ஐஸ்லாந்துக்குச் சென்றார் , அங்கு 1947 ஏப்ரல் 5-6 தேதிகளில் ஹெக்லா மலை வெடிப்பதைக் கண்டார். ஐஸ்லாந்தில் இருந்தபோது, அவர் நார்ஸ் தேவாலயத்தையும் ஏற்றுக்கொண்டார். அவர் சிறிது காலம் இங்கிலாந்துக்குத் திரும்பினார், பின்னர் அவர் ஸ்வீடனுக்குப் பயணம் செய்தார் , அங்கு அவர் ஸ்வென் ஹெடினைச் சந்தித்தார் .

ஜூன் 15, 1948 அன்று, அவர் நோர்ட்-எக்ஸ்பிரஸில் ஏறி டென்மார்க்கிலிருந்து ஜெர்மனிக்குச் சென்றார், அங்கு அவர் "ஜெர்மனியின் ஆண்களும் பெண்களும்" "நமது புகழ்பெற்ற தேசிய சோசலிச நம்பிக்கையைப் பற்றிப்பிடித்து எதிர்க்க" ஊக்குவித்த கையால் எழுதப்பட்ட துண்டுப்பிரசுரங்களின் ஆயிரக்கணக்கான பிரதிகளை விநியோகித்தார்! அவர் கோல்ட் இன் தி ஃபர்னஸில் தனது அனுபவத்தை விவரித்தார்.

1970களின் பிற்பகுதியில், அவருக்கு கண்புரை நோய் ஏற்பட்டது , இதன் விளைவாக அவரது பார்வை வேகமாக மோசமடைந்தது. இந்தியாவில் உள்ள பிரெஞ்சு தூதரகத்தின் எழுத்தரான மிரியம் ஹிர்ன், அவரை அடிக்கடி வீட்டிற்குச் சென்று கவனித்துக் கொண்டார். அவர் இந்தியாவை விட்டு வெளியேற முடிவு செய்து, 1981 இல் ஜெர்மனிக்குத் திரும்பி பவேரியாவில் வசித்து, 1982 இல் பிரான்சுக்குத் திரும்பினார். சாவித்ரி 1982 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் எசெக்ஸில் உள்ள சிபிள் ஹெடிங்ஹாமில் ஒரு நண்பரின் வீட்டில் இறந்தார். அவரது மரணத்திற்கான காரணம் மாரடைப்பு மற்றும் கரோனரி த்ரோம்போசிஸ் என பதிவு செய்யப்பட்டது . அவர் இறக்கும் போது மாட் கோஹலின் அழைப்பின் பேரில் அமெரிக்காவில் விரிவுரை செய்யச் சென்று கொண்டிருந்தார். அவரது உடல் எசெக்ஸின் கோல்செஸ்டரில் ஒரு எளிய விழாவில் தகனம் செய்யப்பட்டது , இதில் டோனி வில்லியம்ஸ் மற்றும் இரண்டு இளம் பிரிட்டிஷ் நாஜிக்கள் கலந்து கொண்டனர். தேவியின் அஸ்தி ஒரு பொறிக்கப்பட்ட கலசத்தில் வர்ஜீனியாவின் ஆர்லிங்டனில் உள்ள அமெரிக்க நாஜி கட்சியின் தலைமையகத்திற்கு அனுப்பப்பட்டது, பின்னர் அவை எடுத்துச் செல்லப்பட்டு விஸ்கான்சினின் மில்வாக்கியில் உள்ள "நாஜி மரியாதை மண்டபத்தில்" ஜார்ஜ் லிங்கன் ராக்வெல்லின் அஸ்திக்கு அடுத்ததாக மாட் கோஹலால் வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது . அவர் இறக்கும் போது அவர் மிகவும் ஏழையாக இருந்ததாகக் கூறப்படுகிறது.
வாழ்க்கையில், தேவிக்கு சில சாதனைகள் மட்டுமே இருந்தன (குறைந்தபட்சம் நாசிசத்தை மீண்டும் தொடங்குவதற்கான அவரது இலக்குகளுடன் ஒப்பிடும்போது), ஆனால் அவரது எழுத்து நவ-நாஜி இயக்கத்தை, குறிப்பாக எஸோதெரிக் நவ-நாசிசத்தை பெரிதும் பாதித்து வருகிறது . கல்வியாளர் ஜெஃப்ரி கப்லான், தேவி "போருக்குப் பிந்தைய தேசிய சோசலிசத்தின் இடிபாடுகளில் இருந்து வெளிவந்த மிகவும் கட்டாய நபர்களில் ஒருவர்" என்று விவரித்தார், மேலும் நவ-நாஜி மறைபொருள் மீதான அவரது செல்வாக்கை "எந்தவொரு நபரை விடவும் அதிகமாக" குறிப்பிட்டார். அவரது படைப்புகள் ஆல்ட்-ரைட் , அத்துடன் புதிய யுக மதம் மற்றும் ஆழமான சூழலியல் ஆகியவற்றையும் பாதித்துள்ளன . அவரது எழுத்துக்களுக்கு மேலதிகமாக, பல தீவிர வலதுசாரிகளுடனான அவரது கடிதப் போக்குவரத்து நவ-நாஜி இயக்கத்திற்கு குறிப்பிடத்தக்க செல்வாக்கு செலுத்தியது. அவர் சிலி நாட்டுத் தூதர் மிகுவல் செரானோவையும் பாதித்தார் , மேலும் அவரது ஹோலோகாஸ்ட் மறுப்பு எர்ன்ஸ்ட் ஜூண்டலைப் பாதித்தது . 1982 ஆம் ஆண்டில், பிராங்கோ ஃப்ரெடா தனது படைப்பான கோல்ட் இன் தி ஃபர்னஸின் ஜெர்மன் மொழிபெயர்ப்பை வெளியிட்டார் , மேலும் அவரது வருடாந்திர மதிப்பாய்வின் நான்காவது தொகுதியான ரிஸ்கார்டோ (1980), சாவித்ரி தேவிக்கு "ஆரிய புறமதத்தின் மிஷனரி " என்று அர்ப்பணிக்கப்பட்டது .

பேப்பர்பாய்
சென்னை சனிக்கிழமை 21.03.2026

## சபரிமலை தங்கக் கவச விவகாரம்: 2 பேருக்கு ஜாமீன் வழங்கியது நீதிமன்றம்



**திருவனந்தபுரம், மார்ச் 21:**

சபரிமலை தங்கக் கவச முறைகேடு வழக்குகளில் கைது செய்யப்பட்ட 2 பேருக்கு கொல்லம் நீதிமன்றம் வழங்கியது.

கடந்த 2019-இல் சபரிமலை ஐயப்பன் கோயிலின் கருவறைக் கதவுகள் மற்றும் துவார பாலகா சிலைகளின் தங்கக் கவசங்கள் புதுப்பிக்கப்பட்ட பிறகு, அவற்றின் எடை குறைந்ததாகப் புகாா எழுந்தது. இது தொடா்பாக இரு வழக்குகள் பதிவுசெய்யப்பட்ட நிலையில் விசாரணை மேற்கொள்ள கேரள உயா் நீதிமன்ற வழிகாட்டுதலில் சிறப்புப் புலனாய்வுக் குழு (எஸ்ஐடி) அமைக்கப்பட்டது. இந்த முறைகேடு வழக்கில் திருவிதாங்கூா் தேவஸ்வம் வாரியத்தின் (டிடிபி), முன்னாள் தலைவா்கள், நிா்வாகிகள், தொழிலதிபா் உண்ணிகிருஷ்ணன் போற்றி உள்பட பலா் கைது செய்யப்பட்டனா்.

சென்னையைச் சோ்ந்த ஸ்மாா்ட் கிரியேஷன்ஸ் தலைமை செயல் அதிகாரி (சிஇஓ) பங்கஜ் பண்டாரி மற்றும் கா்நாடக மாநிலம், பெல்லாரியைச் சோ்ந்த நகைக் கடை அதிபா் கோவா்தன் ரோட்டம் ஆகியோா் இரு வழக்குகளிலும் கைது செய்யப்பட்டிருந்தனா்.

கருவறைக் கதவுகள் வழக்கில் பங்கஜ் பண்டாரி 9-ஆவது குற்றவாளியாகவும் துவார பாலகா சிலைகள் வழக்கில் 12-ஆவது குற்றவாளியாகவும் சோ்க்கப்பட்டாா். அதேபோல் கருவறைக் கதவுகள் வழக்கில் 10-ஆவது குற்றவாளியாகவும் துவார பாலகா சிலைகள் வழக்கில் 13-ஆவது குற்றவாளியாகவும் கோவா்தன் ரோட்டம் சோ்க்கப்பட்டு எஸ்ஐடி விசாரணை நடத்தி வந்தது.

இந்நிலையில், இருவரும் கைது செய்யப்பட்டு 90 நாள்களாகியும் குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படாததால் அவா்களுக்கு கொல்லம் ஊழல் தடுப்பு நீதிமன்ற நீதிபதி மோஹித் சிஎஸ் ஜாமீன் வழங்கி உத்தரவிட்டாா்.

இதைத் தொடா்ந்து, சபரிமலை தங்கக் கவசம் தொடா்புடைய வழக்குகளில் இதுவரை 10 போ் ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளனா்.

மாா்ச் மாத இறுதிக்குள் இந்த வழக்குகளில் குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்வதாக கேரள உயா் நீதிமன்றத்தில் எஸ்ஐடி கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## போரால் மாற்றுப் பாதையில் விமானங்களை இயக்க இந்திய விமானத் துறை முடிவு!



**புதுடெல்லி, மார்ச் 21:**

அமெரிக்கா, இஸ்ரேல் - ஈரான் போர் காரணமாக வளைகுடா வான்வழியைத் தவிர்க்குமாறு விமான நிறுவனங்களுக்கு இந்திய விமானப் போக்குவரத்துத் துறை அறிவுறுத்தியுள்ளது.

அமெரிக்க, இஸ்ரேல் - ஈரான் போர் தொடர்ந்து நடைபெற்று வருவதால் வளைகுடா நாடுகளின் வான்வழி, கடல்வழி போக்குவரத்துகளில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இதனால், பாதுகாப்பு அபாயங்களைக் கருத்தில் கொண்டு அந்தப் பகுதி வான்வழி போக்குவரத்தைத் தவிர்த்து மாற்றுப் பாதைகளில் விமானங்களை இயக்க விமான நிறுவனங்களுக்கு இந்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகம் அறிவுரை வழங்கியுள்ளது.

இந்தியாவை ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் மேற்கு ஆசியாவுடன் இணைக்கும் முக்கிய வான்வழித் தடங்களில் இடையூறு ஏற்பட்டுள்ள நிலையில் இந்திய விமானப் போக்குவரத்துத் துறை இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

ஏர் இந்தியா நிறுவனம் பல்வேறு நீண்ட தூர விமானங்களை இந்த வழித்தடத்தில் இயக்கிவந்த நிலையில் ஈரான் மற்றும் ஈராக் மீதான கட்டுப்படுத்தப்பட்ட வான்வெளியைத் தவிர்ப்பதற்காக மாற்றுப் பாதைகளில் தற்போது விமானங்களை இயக்கி வருகிறது. இதனால், விமானப் பயண நேரம் அதிகரித்துள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு, விமானப் பணி நேரம் தொடர்பான தளர்வுகளை இந்திய விமானத் துறை வழங்கியுள்ளது.

இதுதொடர்பாகப் பேசிய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடு, “ஐரோப்பா மற்றும் அமெரிக்கா செல்லும் இந்திய விமானங்களுக்கு மேற்காசிய வான்வழி முக்கிய வழித்தடமாக உள்ளது. வான்வழிப் போக்குவரத்து சார்ந்த தடைகளைக் குறைக்கவும், பயணிகளின் வசதியை உறுதிப்படுத்தவும் சம்பந்தப்பட்ட வெளியுறவுத் துறை அதிகாரிகள் மற்றும் விமான நிறுவனங்களிடம் இந்திய அரசு தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்திவருகின்றது” என்று அவர் தெரிவித்தார்.

நாங்கள் இப்போது நடுத் தெருவில் நிற்கிறோம். மகன் என்றாவது ஒரு நாள் கண் விழிப்பான் என்ற நம்பிக்கையில், அவனது கைக்கடிகாரத்தையும் அலைபேசியையும் இன்னும் அவரது தாயார் கையில் பத்திரமாக வைத்துள்ளார்.

அவர்கள் எங்களது வீட்டையும், பணத்தையும் பறித்திருக்கலாம். ஆனால், என் மகன் மீண்டும் வருவான் என்ற எங்களது நம்பிக்கையை மட்டும் யாராலும் பறிக்க முடியாது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## குழு மத மாற்றத்துக்கு ஆயுள் தண்டனை: சத்தீஸ்கர் பேரவையில் மசோதா தாக்கல்

**புதுடெல்லி, மார்ச் 21:**

குழு மத மாற்றத்தில் ஈடுபடுபவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்க வழிவகுக்கும் மதச் சுதந்திர மசோதா 2026 சத்தீஸ்கர் பேரவையில் வியாழக்கிழமை தாக்கல் செய்யப்பட்டது. அண்மையில் கட்டாய மத மாற்றத்தை தடுக்கும் மதச் சுதந்திர மசோதா மகாராஷ்டிரா பேரவை மற்றும் மேலவையில் நிறைவேற்றப்பட்ட நிலையில் சத்தீஸ்கர் பேரவையிலும் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதாவை சத்தீஸ்கர் துணை முதல்வரும் உள்துறை அமைச்சருமான விஜய் சர்மா பேரவையில் வியாழக்கிழமை தாக்கல் செய்தார். மத்திய பிரதேசத்தில் இருந்து 2000-இல் சத்தீஸ்கர் தனி மாநிலமாக பிரிக்கப்பட்டது.

அதற்கு முன்பாக இயற்றப்பட்ட சத்தீஸ்கர் மதச் சுதந்திர சட்டம்,1968-க்கு மாற்றாக புதிய சட்டத்தை கொண்டுவரும் நோக்கில் தற்போது மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

அதில் கூறப்பட்டிருப்பதாவது: மதச் சுதந்திர மசோதா 2026, சமூக ஊடகங்கள் மற்றும் எண்ம தளங்கள் உள்பட எந்த முறையிலும் கட்டாயமாகவோ மோசடியாகவோ ஏமாற்றும் விதமாகவோ அல்லது திருமணத்துக்காகவோ மத மாற்றம் மேற்கொள்ளப்படுவது முற்றிலும் தடுக்கப்படுகிறது.

குழு, கட்டாய மதமாற்றம் வரையறை: பரிசுகள், நிதி உதவி, வேலைவாய்ப்பு, இலவச கல்வி அல்லது மருத்துவ வசதிகள், சிறப்பான வாழ்வாதாரம் உள்ளிட்டவை வழங்குவதாக கூறுவது ‘ஏமாற்று வார்த்தைகள்’ என வரையறைக்கப்படுகிறது. உளவியல் அழுத்தம், உடல்ரீதியான தாக்குதல் அல்லது அச்சுறுத்தல், சமூக புறக்கணிப்பு உள்ளிட்டவற்றின்கீழ் மேற்கொள்ளப்படும் மத மாற்றம் கட்டாய மத மாற்றமாக கருதப்படும். ஒரே நிகழ்வில் இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட நபர்களை மத மாற்றம் செய்வது குழு மத மாற்றம் என வரையறைக்கப்படுகிறது.

## தேர்தல் ஆணைய செயல்பாடுகள் அதிர்ச்சியளிக்கிறது: மம்தா பானர்ஜி

**கொல்கத்தா, மார்ச் 21:**

மேற்கு வங்கத்தில் இந்திய தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் அதிர்ச்சியளிப்பதாக தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு அந்த மாநில முதல்வர் மம்தா பானர்ஜி வியாழக்கிழமை கடிதம் எழுதியுள்ளார்.

மேற்கு வங்கத்தில் 294 பேரவைத் தொகுதிகளுக்கு ஏப்ரல் 23, 29 ஆகிய தேதிகளில் இரு கட்டங்களாக தேர்தல் நடத்தப்பட்டு மே 4-ஆம் தேதி வாக்குகள் எண்ணப்படவுள்ளன. அங்கு தேர்தல் நடத்தை விதிகள் அமலான நிலையில், கடந்த புதன்கிழமை ஒரே நாளில் அரசு உயரதிகாரிகளை ஒட்டுமொத்தமாக பணி இடமாற்றம் செய்து தேர்தல் ஆணையம் நடவடிக்கை மேற்கொண்டது.

புதிதாக, மாவட்ட ஆட்சியர்கள் உள்பட 13 ஐஏஎஸ் அதிகாரிகளைப் பணி இடமாற்றம் செய்து உத்தரவு பிறப்பித்தது. இதற்கு கண்டனம் தெரிவித்து ஞானேஷ் குமாருக்கு மம்தா பானர்ஜி எழுதிய கடிதத்தில், ‘பேரவைத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட சில தினங்களில் எவ்வித முறையான காரணங்களுமின்றி காவல் துறைத் தலைவர், தலைமைச் செயலர், உள்துறைச் செயலர், மாவட்ட ஆட்சியர்கள், மூத்த காவல் துறை அதிகாரிகள் என பலரை ஒரே நாளில் தேர்தல் ஆணையம் இடமாற்றம் செய்துள்ளது.

அரசமைப்புச் சட்ட உரிமைகள் மற்றும் நாகரிகத்தின் அனைத்து எல்லைகளையும் கடந்து ஒரு தலைபட்சமாக தேர்தல் ஆணையம் செயல்படுவது அதிர்ச்சியளிக்கிறது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) தொடங்கியதில் இருந்து பல்வேறு இடர்பாடுகளை தேர்தல் ஆணையம் ஏற்படுத்தி வருகிறது. எஸ்ஐஆர் முரண்பாட்டு பட்டியலில் உள்ளவர்களின் விவரங்கள் சரிபார்ப்பு பணி நடைபெற்று வரும் வேளையில் மாவட்ட தேர்தல் அதிகாரிகளை தேர்தல் ஆணையம் இடமாற்றம் செய்துள்ளது கண்டனத்துக்குரியது. கூஷ தேர்தல் ஆணையத்தின் தன்னிச்சையான முடிவுகள் ஜனநாயகம் மற்றும் கூட்டாட்சி முறைக்கு எதிரானது.

அவசரநிலை அல்லது மத்திய அரசின் அதிகாரத்தை மறைமுகமாக அதிகரிக்கும் இந்த நடவடிக்கைகள் கவலையளிக்கிறது’ எனத் தெரிவிக்கப்பட்டது.

## நொய்டாவில் ரூ.12 லட்சம் மோசடி செய்தவா் கைது

**புதுடெல்லி, மார்ச் 21:**

நொய்டாவில் சமூக ஊடகங்களில் போலியான சுற்றுலா மற்றும் பயணத் தொகுப்புகளை வழங்குவதன் மூலம் ரூ.12 லட்சம் மோசடி செய்த நபரை கைது செய்ததாக சைபா் கிரைம் காவல் துறையினா் புதன்கிழமை தெரிவித்தனா்.

இதுகுறித்து காவல் துறை துணை ஆணையா் ஷாவ்யா கோயல் கூறியதாவது: இந்த வழக்கில் அதித்யா ராய் என்பவா் கைது செய்யப்பட்டாா். அவா் சமூக ஊடகங்களில் மக்களை ஈா்க்கும் வகையில் சிங்கப்பூா், நேபாளம் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுலா தொகுப்புகளை வழங்குவதாக விளம்பரப்படுத்தியுள்ளாா். முன்பதிவுக்கு பணம் செலுத்துமாறு கூறி பலரிடம் மோசடி செய்துள்ளாா்.

இதுவரை ரூ.12 லட்சம் வரை அவா் மோசடி செய்துள்ளது விசாரணையில் தெரியவந்தது. அவரிடம் இருந்து 3 கைப்பேசிகள் மற்றும் மடிக்கணினி ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. தொடா்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது என்றாா்.

## ஜனநாயகத்தை பாதுகாக்கும் போராட்டத்தில் மம்தாவுக்கு ஆதரவு: கேஜரிவால்

**புதுடெல்லி, மார்ச் 21:**

முதல்வா் மம்தா பானா்ஜி ஜனநாயகத்தை பாதுகாக்க போராடுவதாக அவருக்கு கேஜரிவால் ஆதரவு தெரிவித்துள்ளாா்.



இதுதொடா்பாக தில்லி முன்னாள் முதல்வா் அரவிந்த் கேஜரிவால் ‘எக்ஸ்’ தளத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது:

தோ்தல்களில் தோ்தல் ஆணையத்தை ஓா் ஆயுதமாகக் கொண்டு சூழ்ச்சியின் மூலம் பாஜக வெற்றி பெற்று வருகிறது.

ஓராண்டுக்கு முன்பாக தில்லி பேரவையின் தேசிய தலைநகா் சந்தித்த அதே சூழலை மேற்கு வங்கம் தற்போது எதிா்கொண்டு வருகிறது.

தில்லி பேரவைத் தோ்தலின்போது, வாக்காளா்கள் பட்டியலில் இருந்து பெயா்கள் நீக்கப்பட்டன. பாஜகவின் செயல்பாடுகளுக்கு காவல் துறை எவ்வித கட்டுப்பாடுகளையும் விதிக்கவில்லை. அவா்களுடைய வெற்றிக்காக ஒட்டுமொத்த நிா்வாகமும் செயல்பட்டது.

ஜனநாயகம் அடிப்படை சிதைக்கப்பட்டது.


தற்போது, சகோதரரி மம்தா ஜனநாயகத்தை பாதுகாக்க போராடி வருகிறாா்.

இந்தப் போராட்டத்தில், ஆம் ஆத்மி அவருக்கு துணை நிற்கிறது என்று அந்தப் பதிவில் கேஜரிவால் தெரிவித்துள்ளாா்.

## பண மோசடி வழக்கு: அனில் அம்பானியிடம் சிபிஐ விசாரணை

**புதுடெல்லி, மார்ச் 21:**

பாரத ஸ்டேட் வங்கியில் (எஸ்பிஐ) கடன் பெற்ற ரூ. 2,929 கோடி மோசடியில் ஈடுபட்டது தொடர்பான வழக்கில் ரிலையன்ஸ் குழுமத் தலைவரும், பிரபல தொழிலதிபருமான அனில் அம்பானியிடம் (66) சிபிஐ அதிகாரிகள் வியாழக்கிழமை விசாரணை மேற்கொண்டனர்.



இதற்காக, தில்லியில் உள்ள சிபிஐ தலைமை அலுவலகத்துக்கு வியாழக்கிழமை காலை வந்த அவரிடம், சிபிஐ அதிகாரிகள் பல மணி நேரம் விசாரணை மேற்கொண்டதாக தெரிகிறது.

இதுகுறித்து அனில் அம்பானிக்கான செய்தித்தொடர்பாளர் கூறுகையில், ‘எஸ்பிஐ தரப்பில் அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கை (எஃப்ஐஆர்) தொடர்புடைய விசாரணைக்காக அனில் அம்பானி ஆஜாரானார். தொடர்ந்து, வெள்ளிக்கிழமையும் (மார்ச் 20) விசாரணைக்கு ஆஜராவார். அனைத்து விசாரணை முகமைகளின் விசாரணைக்கும் அவர் முழு ஒத்துழைப்பை அளிப்பார்’ என்றார். பல்வேறு பொதுத் துறைவங்கிகளில் கடன்பெற்று ரூ. 40,000 கோடிக்கும் மேல் மோசடி செய்தது தொடர்பாக எஸ்பிஐ அளித்த புகாரின் பேரில், அனில் அம்பானி மீதும், அவரின் ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனம் மீதும் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் சிபிஐ வழக்குப் பதிவு செய்தது. பின்னர், மும்பையில் உள்ள அனில் அம்பானியின் வீடு மற்றும் அவருக்குச் சொந்தமான இடங்களில் சிபிஐ சோதனை மேற்கொண்டது.

## 2 குழந்தைகளுக்கு அதிகமாக உள்ள குடும்பத்துக்கு ரூ. 25,000 ஊக்கத்தொகை: அறிவித்த ஆந்திர முதல்வர்

**திருப்பதி, மார்ச் 21:**

இரண்டு அல்லது மூன்று குழந்தைகளைப் பெற்றுள்ள குடும்பத்துக்கு ரூ. 25,000 ஊக்கத்தொகை உள்ளிட்ட மக்கள்தொகையை அதிகரிப்பதற்கான பல்வேறு புதிய அம்சங்களுடன்கூடிய மாநில மக்கள்தொகை மேலாண்மை கொள்கையை தெலுங்கு புத்தாண்டு (யுகாதி) நாளில் ஆந்திர முதல்வா என். சந்திரபாபு நாயுடு வியாழக்கிழமை அறிவித்தாா.



முதியவா்களுக்கான சிறந்த பராமரிப்பை உறுதிப்படுத்தவும், சமூக நிலைத்தன்மையை விரிவுபடுத்தும் வகையிலும் கூட்டு குடும்ப முறைக்குப் புத்துயிா் கொடுப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக முதல்வா அப்போது கூறினாா.

ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் அரசு சாா்பில் நடத்தப்பட்ட யுகாதி விழாவில் பேசும்போது இந்த அறிவிப்பை முதல்வா சந்திரபாபு நாயுடு வெளியிட்டாா. அப்போது அவா பேசியதாவது:

பிறப்பு விகிதம் குறைந்து வருவதும், வயது முதிந்தவா்கள் எண்ணிக்கை அதிகரிப்பதும் உலக அளவிலான தீவிர பிரச்னையாக உருவெடுத்து வருகிறது. இந்தப் போக்கு, தற்போது தென் இந்தியாவிலும் தற்போது தொடங்கியுள்ளது.

இளம் மக்கள்தொகை எண்ணிக்கை இவ்வாறு தொடா்ந்து குறைந்து வருவது, வரும் காலங்களில் பணியிடங்களில் மனிதப் பங்கேற்பு குறைந்து, இயந்திரங்கள் மற்றும் தானியங்கிகளின் ஆதிக்கத்துக்கு வழிவகுத்துவிடும்.

அந்த வகையில், குடும்பக் கட்டுப்பாடு மீதான எனது கண்ணோட்டம், தற்போது மக்கள்தொகை மேலாண்மைக்கான பரந்த உத்தியாக மாறியுள்ளது. மக்கள்தொகை சமநிலையைப் பேண, பெரிய குடும்பங்களே இன்றியமையாதவை.

சமூக நிலைத்தன்மையைப் பேணுவதற்கு, ஒரு தம்பதிக்கு 2.1 விகதத்தில் குழந்தைகள் இருக்க வேண்டும். ஆனால், மாநிலத்தில் இந்த விகிதம் 1.5 விகிதமாகக் குறைந்து. இது நீண்டகால மக்கள் தொகையியல் ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தும்.

முன்னா், ‘ஒரு குழந்தை பெற்றுக்கொள்வது சிறந்தது; 2 குழந்தைகள் இருக்கலாம்; 3 குழந்தைகள் வேண்டாம்’ என்று நான் கூறினேன். ஆனால், இப்போது அதை தலைகீழாக மாற்றுகிறேன். ஒரு குழந்தை போதாது; இரண்டு குழந்தைகள் இருப்பது நல்லது; மூன்று குழந்தைகள் இருப்பது மேலும் சிறந்தது. அந்த வகையில், மாநிலத்தில் மக்கள்தொகையை அதிகரிக்கச் செய்யும் வகையிலும், மக்கள்தொகை மேலாண்மை கொள்கையை மாநில அரசு கொண்டுவந்துள்ளது. இதன் கீழ், மக்கள் மதிப்பு சாா்ந்த வாழ்க்கை முறைக்குத் திரும்பவும், கூட்டுக் குடும்ப முறைக்குப் புத்துயிா் அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், 2 அல்லது 3 குழந்தைகளைப் பெற்றுள்ள குடும்பங்களுக்கு இந்தக் கொள்கையின் கீழ் ரூ. 25,000 ஊக்கத் தொகை அளிக்கப்படும் என்றாா.

## வைரலான விடியோ! மெட்ரோ ரயிலில் சப்தமாகப் பாடிய பெண்கள் மீது நடவடிக்கை!

**பெங்களூரு, மார்ச் 21:**

மெட்ரோ ரயிலுக்குள் சப்தமாகப் பாடி மற்ற பயணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில், பதினொரு பெண் பயணிகள் கொண்ட குழு மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டதாக காவல்துறை வெள்ளிக்கிழமை தெரிவித்தது.




மார்ச் 15ஆம் தேதி இரவு இந்த சம்பவம் நடந்துள்ளது. பெங்களூர் சர்வதேச கண்காட்சி மையத்திலிருந்து கேம்பேகௌடா ரயில் நிலையம் வழித்தடத்தில் பயணித்த மெட்ரோ ரயிலில் 11 பெண்கள் சப்தமாகப் பாடும் விடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகியிருந்தது.

மெட்ரோ ரயிலுக்குள் ஏறிய 11 பெண்களும் திடீரென சப்தமாகப் பாடத் தொடங்கினர். இது அருகில் இருந்த பயணிகளுக்கு தொந்தரவாக இருந்ததாக அவர்கள் கூறியும் பாடலை நிறுத்தவில்லை. இதையடுத்து, பயணிகள்சிலர், ரயில் நிலையத்தில் இறங்கி, மெட்ரோ ரயிலின் கதவை மூட விடாமல் வாக்குவாதம் செய்தனர். அங்கு வந்த பாதுகாவலர்கள், தலையிட்டு அந்தப் பெண்களைக் கைது செய்தனர். மெட்ரோ ரயில் நிலை கண்காணிப்பாளர் அளித்த புகாரின் அடிப்படையில், 11 பெண்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்கும் பதிவு செய்யப்பட்டது. திண்டனைக்குரிய குற்றம் இல்லாததால், அவர்களது செயல் குறித்து எடுத்துக் கூறப்பட்டு, அவர்கள் மன்னிப்புக் கேட்டதையடுத்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## கோடை காலத்தில் நாட்டின் மின்சாரத் தேவை 270 ஜிகா வாட்டாக அதிகரிக்கும்: மத்திய அமைச்சா் தகவல்

**புதுடெல்லி, மார்ச் 21:**

இந்த கோடை காலத்தில் நாட்டின் மின்சாரத் தேவை 270 ஜிகா வாட்டாக அதிகரிக்கும் என்று மத்திய மின்சாரத் துறை அமைச்சா் மனோகா் லால் கட்டா் தெரிவித்துள்ளாா்.

புது தில்லியில் வியாழக்கிழமை நடைபெற்ற பாரத் எலெக்ட்ரிசிட்டி தேசிய மாநாட்டில், இதுகுறித்து அவா் பேசியதாவது: 2024-25ஆம் ஆண்டில் நாட்டின் மின்சாரத் தேவை 250 ஜிகா வாட்டாக உச்சம் தொட்டது. அதேபோல், 2025-26ஆம் ஆண்டிலும் மின்சாரத் தேவை 270 ஜிகா வாட்டாக அதிகரிக்கும் என மின்சார அமைச்சகம் இலக்கு வைத்திருந்தது. ஆனால் மோசமான வானிலை காரணமாக (மழை), அப்போது மின்சாரத் தேவை அதிகரிக்கவில்லை.

இந்த சீசனில் மே - ஜூன் மாதங்களில் நாட்டில் மின்சாரத் தேவை 270 ஜிகா வாட்டாக அதிகரிக்கக்கூடும் என கணக்கிட்டு, அதற்குத் தயாராக உள்ளோம். ஆதலால் எந்தப் பிரச்னையும் ஏற்படாது. நாட்டில் 2034-ஆம் ஆண்டுக்குள் 900 ஜிகா வாட் மின்சாரம் கொண்டு செல்லும் வகையில் மின்சார வழித்தடம் ஏற்படுத்தப்படும். கடந்த 10 ஆண்டுகளில் புதிதாக 2.09 லட்சம் சா்க்யூட் கிலோ மீட்டா் தூரத்துக்கு மின்சார வழித்தடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது ஏற்கெனவே இருந்ததை விட 72 சதவீதம் அதிகமாகும். நமது மின்சார வழித்தடம், உலகிலுள்ள மிகவும் வலுவான தடங்களில் ஒன்றாக மாறி வருகிறது. இது எதிா்காலத்தில் பெரும் பலனைத் தரும் என்றாா்.

மேற்காசியாவில் ஈரான், இஸ்ரேல்-அமெரிக்கா இடையே போா் நடப்பதால் கச்சா எண்ணெய் கப்பல்களின் போக்குவரத்தில் சிக்கல் நிலவுகிறது. இதனால் பெட்ரோல், டீசல் வாகனத்தை பயன்படுத்தும் நபா்கள், மின்சார காா்களைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனா். எரிவாயு சிலிண்டா் பிரச்னை காரணமாக, மின்சாரத்தில் செயல்படும் மின்சார அடுப்பை மக்கள் பயன்படுத்தி வருகின்றனா். இதன் காரணமாகவும், நாட்டில் மின்சாரத் தேவை அதிகரித்து வருகிறது.




# வேலை தேடி சென்னை வந்தபோது சோகம்: மெரினாவில் மூழ்கி இளைஞர் பரிதாப உயிரிழப்பு

**சென்னை, மார்ச்.21:** வேலை தேடி சென்னை வந்த சேலம் இளைஞர் மெரினாவில் மூழ்கி உயிரிழந்துள்ளார். சேலம் மாவட்டம், பாறைப்பட்டி பகுதியைச் சேர்ந்தவர் தயானந்தன் (29). இவர், கடந்த 16-ம் தேதி சேலத்தில் இருந்து வேலை தேடி சென்னை வந்தார்.

இந்நிலையில், நேற்று மதியம் மெரினா கடற்கரையில் மாற்றுத் திறனாளிகள் நடைபாதை அருகே பேக்கில் செல்போன், மணி பர்ஸ், ஆகியவற்றை கரையில் வைத்துவிட்டு, கடலில் குளித்துள்ளார்.

அப்போது எதிர்பாராத விதமாக, கடல் அலையில் சிக்கி, ஆழமான பகுதியில் இழுத்துச் செல்லப்பட்டவர் சிறிது நேரத்தில் சடலமாக கரை ஒதுங்கினார்.

இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த அங்கிருந்தவர்கள் உடனடியாக போலீஸாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். மெரினா போலீஸார் சம்பவ இடம் விரைந்து தயானந்தன் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

போலீஸார் விசாரணை

தயானந்தன் கடலில் குளிக்கும்போது அலையில் சிக்கி உயிரிழந்தாரா? அல்லது மெரினாவில் குதித்து தற்கொலை செய்து கொண்டாரா? என போலீஸார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

# மூதாட்டிகளிடம் நூதன முறையில் தொடர்ச்சியாக நகைகளை திருடிய நபர் கைது



**சென்னை, மார்ச்.21:** மூதாட்டிகளிடம் தொடர்ச்சியாக நூதன முறையில் நகை திருட்டில் ஈடுபட்டு வந்த நபர் கைது செய்யப்பட்டார். சென்னை சூளை, ஆண்டியப்பன் நாயக்கன் தெருவைச் சேர்ந்தவர் மூதாட்டி காளியம்மாள் (76).

கடந்த 17-ம் தேதி காலை சூளை, வி.வி.கோவில் அருகே உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு மாத்திரைகள் வாங்க சென்று கொண்டிருந்தார்.

அப்போது, அங்கு வந்த 50 வயதுடைய ஆண் ஒருவர், காளியம்மாவிடம் நலம் விசாரித்து, இது ரமலான் மாதம் என்பதால் ஏழை மக்களுக்கு தொழில் அதிபர் ஒருவர் நகை மற்றும் பணம் கொடுக்கிறார் என நம்பிக்கையுடன் பேச்சு கொடுத்தார்.

இதை உண்மை என நம்பிய மூதாட்டி, தன்னை அங்கு அழைத்துச் செல்லும்படி கூறினார். இதையடுத்து, அந்த நபர் சற்று தொலைவுக்கு அழைத்துச் சென்று, ஒரு பூட்டிய கடையின் அருகே அமர வைத்து, 'ஏழைகளுக்கு மட்டுமே தொழில் அதிபர் நகை, பணம் கொடுக்கிறார்.

எனவே, நீங்கள் இப்படி நகை அணிந்து வந்தால் அந்த உதவி கிடைக்காது. எனவே, உங்களது நகைகளை கழட்டி கொடுங்கள், நான் வைத்துக் கொள்கிறேன். நலத்திட்ட உதவி கிடைத்த உடன் உங்களது நகைகளை திரும்ப கொடுத்து விடுகிறேன் என தெரிவித்துள்ளார்.


இதை உண்மை என நம்பிய மூதாட்டி காளியம்மாள், தனது கம்மல் மற்றும் மோதிரத்தை கழற்றி கொடுத்தார். அதை பெற்றுக் கொண்ட அந்த நபர், இங்கேயே சிறிது நேரம் இருங்கள்.

அங்கு கூட்டம் எவ்வளவு உள்ளது என பார்த்து விட்டு வருகிறேன் என சென்றவர் மீண்டும் திரும்பி வரவில்லை. நீண்ட நேரமாகியும் அந்த நபர் வராததால், தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த காளியம்மாள் இது தொடர்பாக வேப்பேரி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர்.

இதில், நூதன முறையில் மூதாட்டியிடம் நகைகளை திருடியது சென்னை டி.பி சத்திரத்தைச் சேர்ந்த திருமலை (50) என்பது தெரிந்தது. தலைமறைவாக இருந்த அவரை போலீஸார் கைது செய்தனர்.

அவரிடமிருந்து 9 கிராம் எடை கொண்ட தங்க கம்மல் மீட்கப்பட்டது. விசாரணையில், திருமலை கடந்த 16-ம் தேதி இதே போல திருவிக நகர் பகுதியில் ஒரு மூதாட்டியை ஏமாற்றி தங்க நகை திருடிச் சென்றதும், இதே பாணியில் அவர் பல மூதாட்டிகளிடம் கைவரிசை காட்டி இருந்ததும் தெரிய வந்ததாக போலீஸார் தெரிவித்தனர்.

# அரசு வேலை பெற்றுத் தருவதாக ரூ.10 லட்சம் மோசடி: சகோதர்களான திமுக பிரமுகர்கள் மீது வழக்கு



**சென்னை, மார்ச்.21:** அரசு வேலை பெற்றுத் தருவதாக கூறி ரூ.10 லட்சம் மோசடி செய்ததாக சகோதரர்களான திமுக பிரமுகர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தைச் சேர்ந்த ராஜேந்திரன் மகன் சுந்தரமூர்த்தி (29). இவர் 2022 ஆண்டு பொறியியல் படிப்பு முடித்துவிட்டு வேலை தேடி வந்துள்ளார்.

அப்போது அவரது தந்தை ராஜேந்திரனுக்கு தெரிந்த நபர் மூலம் சென்னை ஆழ்வார் திருநகரை சேர்ந்த திமுக பிரமுகரான நசீர் அகமத் (35) என்பவருடன் பழக்கம் ஏற்பட்டது.

பின்னர் நசீர் அகமத், ராஜேந்திரனிடம் தனது சகோதரர் பஷீர் அகமத் திமுகவில் முக்கிய பொறுப்பில் உள்ளதாகவும் அவருக்கு கட்சியில் மிகுந்த செல்வாக்கு இருப்பதால் உங்கள் மகனுக்கு அரசு வேலை வாங்கித் தருவதாகவும் தெரிவித்துள்ளார். அதுமட்டுமின்றி அரசு வேலை வாங்கித் தர ரூ.10 லட்சம் செலவாகும் எனக் கூறியுள்ளார்.

இதனை நம்பிய ராஜேந்திரன் தன் மகன் சுந்தரமூர்த்திக்காக ரூ.10 லட்சம் கொடுத்ததாக கூறப்படுகிறது. பணம் வாங்கிய பிறகு நசீர் மற்றும் பஷீர் இருவரும் கூறியதுபோல் வேலை வாங்கி கொடுக்கவில்லையாம்.

மேலும் பணத்தையும் திருப்பிக் கொடுக்கவில்லை எனக் கூறப்படுகிறது. இந்த விவகாரம் தொடர்பாக சுந்தரமூர்த்தி சில தினங்களுக்கு முன் சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் அளித்தார்.

இதுகுறித்து விசாரணை நடத்த மதுரவாயல் போலீஸாருக்கு உத்தரவிடப்பட்டது. அதன்படி போலீஸார் திமுக பிரமுகர் பஷீர் அகமத் மற்றும் அவரது சகோதரர் நசீர் அகமத் இருவர் மீதும் மோசடி உள்ளிட்ட பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தேர்தல் நடத்தை விதிகளை அமல்படுத்த சென்னை விமான நிலையத்தில் அதிகாரிகள் நியமனம்



**சென்னை, மார்ச்.21:** சட்டப் பேரவைத் தேர்தல் அறிவிக்கப் பட்டுள்ள நிலையில், நடத்தை விதிகளை அமல்படுத்தும் விதமாக சென்னை விமான நிலையத்தில் சிறப்பு அதிகாரிகளை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்.23-ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான அறிவிப்பு கடந்த மார்ச் 15-ம் தேதி வெளியான நிலையில், தமிழகம் முழுவதும், தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்து உள்ளன.

2106 பறக்கும் படைகள், நிலை கண்காணிப்பு படைகள் சோதனையில் ஈடுபட்டு வருகின்றன. மேலும், விமான நிலையங்களையும் கண்காணிக்க தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

அதன்படி, சென்னை சர்வதேச விமான நிலையம், சென்னை விமான நிலைய கார்கோ பகுதி ஆகியவற்றை கண்காணிக்க, சிறப்பு அதிகாரிகளை இந்திய தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

சென்னை சர்வதேச விமான நிலையத்தின் வருகை, புறப்பாடு பகுதிகளில் சுங்கச் சோதனைகளை கண்காணிக்க, சுங்கத்துறை இணை ஆணையர் அந்தஸ்தில், சிறப்பு அதிகாரி ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார். அதேபோல், சென்னை விமான நிலைய கார்கோ பகுதிகளில், சரக்குகள் ஏற்றுமதி, இறக்குமதி பகுதிகளில் சுங்கச்சோதனை பிரிவுகளில் கண்காணிப்பதற்காக இணை ஆணையர் அந்தஸ்தில் மற்றொரு சிறப்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் சென்னை விமான நிலையத்தில் பயணிகள், பார்சல்களை தீவிரமாக கண்காணித்து, சந்தேகத்துக்கிடமான தங்கம், வெள்ளி, மின்சாதன பொருட்கள், போதைப் பொருட்கள், போதை மாத்திரைகள், கணக்கில் வராத ரொக்கம் போன்றவைகள் வந்தால், அவற்றை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

கடத்தலின் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்று முழுமையாக விசாரித்து, டெல்லியில் உள்ள தலைமை தேர்தல் அதிகாரிக்கு உடனடியாக அறிக்கை அளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

அத்துடன், சென்னை விமான நிலையத்தில் உள்ள வருமான வரித்துறையினரும், தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். அவர்களும் கூடுதல் கண்காணிப்பு அலுவலர்களை நியமித்துள்ளனர்.

# வாக்குப் பதிவு தினத்தன்று பொதுவிடுமுறை: தமிழக அரசுக்கு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தல்



**சென்னை, மார்ச்.21:** தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவு நடைபெறும் ஏப்.23-ம் தேதி அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு பொது விடுமுறை விட வேண்டும் என்று தமிழக அரசுக்கு, தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

தமிழக சட்டப்பேரவைக்கான தேர்தல் வாக்குப்பதிவு வரும் ஏப்.23-ம் தேதி நடைபெறுகிறது. இந்த தேர்தலில் 2.90 கோடி பெண், 2.78 கோடி ஆண், 7,656 திருநங்கைகள் என மொத்தம் 5.69 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

இந்நிலையில், தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து அரசு, பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்கள், அனைத்து கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கு ஏப்.23-ம் தேதி சம்பளத்துடன் கூடிய பொது விடுமுறை விட வேண்டும்.

தொழிலாளர் பணியாற்றும் தொகுதியில் தேர்தல் நடைபெறாவிட்டாலும், தேர்தல் நடைபெறும் தொகுதியில், அந்த தொழிலாளி வாக்காளராக இருந்தால் அவர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுப்பு அளிக்க வேண்டும்.

தினக்கூலி தொழிலாளராக இருந்தாலும் விடுப்பு அளிக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு, இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தி உள்ளது.

# சென்னை எழும்பூரில் நடைபெறும் புனரமைப்பு பணிகள் காரணமாக ரயில் சேவையில் மாற்றம்!!



**சென்னை, மார்ச்.21:** சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் நடைபெற்று வரும் புனரமைப்பு பணிகள் காரணமாக 11 விரைவு ரயில்களின் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள அறிவிப்பில்;

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாக, வருகிற ஏப்ரல் 5-ம் தேதி இயக்கப்படும் ராமேஸ்வரம் - சென்னை எழும்பூர் சேது சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரயில். ராமேஸ்வரம் - சென்னை எழும்பூர் எக்ஸ்பிரஸ் ரயில், தஞ்சாவூர் - சென்னை எழும்பூர் உழவன் எக்ஸ்பிரஸ் ரயில் , கொல்லம் - சென்னை எழும்பூர் அனந்தபுரி சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரயில் ஆகிய ரயில்கள் தாம்பரம் வரை மட்டுமே இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதைப்போல ஏப்ரல் 6-ம் தேதி இயக்கப்படும் திருநெல்வேலி-சென்னை எழும்பூர் நெல்லை சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரயில், சென்னை எழும்பூர் - ராமேஸ்வரம் சேது சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரயில், சென்னை எழும்பூர் - செங்கோட்டை பொதிகை சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரயில், சென்னை எழும்பூர் - கொல்லம் அனந்தபுரி சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரயில், சென்னை எழும்பூர் - ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் ரயில். சென்னை எழும்பூர் - தஞ்சாவூர் உழவன் எக்ஸ்பிரஸ் ரயில் ஆகிய ரயில்கள் தாம்பரம் ரயில் நிலையத்தில் இருந்து புறப்படும் என்றும். இந்த ரயில்கள் தாம்பரம் - சென்னை எழும்பூர் இடையே இயக்கப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ஏப்ரல் 6-ம் தேதி சென்னை எழும்பூர் - திருச்சி சோழன் சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரயில் சுமார் 2.15 மணி நேரம் தாமதமாக புறப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மத்திய கிழக்கு நாடுகளில் தொடரும் போர்: பஹ்ரைனில் 18 நாட்களாக தவித்த 192 இந்தியர்கள் மீட்பு




**சென்னை, மார்ச்.21:** இஸ்ரேல், அமெரிக்கா, ஈரான் இடையே நிலவி வரும், கடுமையான போர் சூழல் காரணமாக, பஹ்ரைனில் 18 நாட்களுக்கு மேல், தவித்துக் கொண்டிருந்த, 192 இந்தியர்கள் மீட்கப்பட்டு, சிறப்பு தனி விமானம் மூலம் நேற்று சென்னை வந்து சேர்ந்தனர்.

இஸ்ரேல், அமெரிக்கா, ஈரான் இடையே கடந்த பிப் .28-ம் தேதி போர் தொடங்கியதையடுத்து, மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஐக்கிய அரபு நாடுகள், வளைகுடா நாடுகளின் வான்வழிப் பகுதிகள் மூடப்பட்டன.

இதனால், ஐக்கிய அரபு நாடுகள், வளைகுடா நாடுகளில் இருந்து விமான சேவைகள் இல்லாத காரணத்தால், பஹ்ரைன் நாட்டில் உள்ள தமிழர்கள் ஏராளமானவர்கள், இந்தியா திரும்ப முடியாமல், பஹ்ரைன் நாட்டில் தவித்துக் கொண்டு இருந்தனர்.

அவ்வாறு தவித்துக் கொண்டு இருந்தவர்களில் முதியோர், நோயாளிகள், குழந்தைகள், கர்ப்பிணி பெண்கள் ஆகியோர்களுக்கு முன்னுரிமை அளித்து, அவர்களை தனி சிறப்பு விமானம் மூலம், சென்னைக்கு அனுப்பி வைப்பதற்கு, பஹ்ரைனில் உள்ள தமிழ் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஏற்பாடுகளை செய்தனர்.

ஆனால், பஹ்ரைன் நாட்டிலிருந்து சென்னைக்கு விமான சேவையை நடத்தி வரும் கல்ஃப் ஏர்வேஸ் விமான நிறுவனம், தற்போதைய சூழ்நிலையில், பஹ்ரைனிலிருந்து விமான சேவை நடத்த முடியாது என்று கூறிவிட்டது.

அதேசமயம், பஹ்ரைன் அருகே உள்ள சவுதி அரேபியா நாட்டின் தமாம் நகரில் இருந்து சிறப்பு விமானத்தை இயக்குவதற்கு, கல்ஃப் ஏர்வேஸ் விமான நிறுவனம் சம்மதம் தெரிவித்தது. இதையடுத்து, பஹ்ரைன் தமிழ் சங்கத்தை சேர்ந்தவர்கள், அதற்கான ஏற்பாடுகளை செய்தனர்.

192 பேரை பஹ்ரைனிலிருந்து பேருந்துகளின் மூலம், சாலை வழியாக தமாம் நகருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தமாம் நகரில் இருந்து கல்ஃப் ஏர்வேஸ் சிறப்பு விமானம் மூலம், இந்த 192 பேரும் நேற்று முன்தினம் நள்ளிரவு சென்னைக்கு அனுப்பி வைக்கப் பட்டனர்.

இவர்களில் ஒரு சிலர் விமான டிக்கெட்டுக்கு பணம் இல்லாமல் தவித்தனர். அவர்களுக்கு பஹ்ரைன் தமிழ்ச் சங்கம் மற்றும் தொண்டு நிறுவனத்தினர், உதவியுடன் விமான டிக்கெட்டுகள் எடுத்து, சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. நேற்று காலை அந்த சிறப்பு விமானம், சென்னை சர்வதேச விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்தது. அதில் வந்த 192 பேரும் குடியுரிமை, சுங்கத்துறை மற்றும் பாதுகாப்பு சோதனைகள் முடித்து வெளியில் வந்தனர்.

அவர்களை தமிழ் சங்கத்தை சேர்ந்தவர்கள், சென்னை விமான நிலையத்தில் வரவேற்று, அவரவர் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தனர்.

# தேர்தல் பறக்கும்படை அதிகாரிகள் சென்ற கார் விபத்து: எஸ்ஐ உட்பட 4 பேர் காயம்

**சென்னை, மார்ச்.21:** தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் சென்ற கார் விபத்தில் சிக்கியதில் எஸ்.ஐ. உட்பட 4 பேர் காயம் அடைந்தனர்.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அரசியல் கட்சியினர் பணம், பரிசுப் பொருட்களை கொடுத்து வாக்காளர்களை கவர்ந்து விடக்கூடாது என்பதில் தேர்தல் ஆணையம் உறுதியாக உள்ளது.

அதன்படி, சட்ட விரோத பணப்பரிமாற்றத்தைத் தடுக்க தேர்தல் பறக்கும் படை அமைக்கப்பட்டுள்ளது. இந்த படையினர் வாகன சோதனை மற்றும் தணிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களுடன் போலீஸாரும் ஒருங்கிணைந்து பணியாற்றுகின்றனர். இந்நிலையில், புழல் சூரப்பட்டு அருகே 200 அடிசாலையில் மாதவரம் சட்டப்பேரவை தொகுதி பறக்கும் படை அதிகாரிகள் நேற்று முன்தினம் காரில் சென்றனர்.

அப்போது, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த கார், சாலை நடுவே இருந்த தடுப்பு சுவரில் மோதி விபத்துக்குள்ளானது. இதில், காரில் இருந்த பறக்கும் படை அதிகாரி சுரேந்தர், போலீஸ் எஸ்.ஐ. ராமச்சந்திரன், காவலர் ஆரிப், வீடியோகிராபர் விஸ்வநாதன் ஆகிய 4 பேர் காயம் அடைந்தனர்.

உடனடியாக அவர்கள் மீட்கப்பட்டு, ரெட்டேரியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இந்த விபத்து தொடர்பாக போக்குவரத்து புலனாய்வுப் பிரிவு போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

# பெங்களூருவில் பலத்த மழை சென்னைக்கு திருப்பி விடப்பட்ட 30 விமானங்கள்

**சென்னை, மார்ச்.21:** பெங்களூருவில் நேற்றுமுன்தினம் இரவு கனமழை காரணமாக, வான்வழிப் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டது. பெங்களூரு விமான நிலையத்தில் தரையிறங்க வேண்டிய சுமார் 30 விமானங்கள் சென்னைக்குத் திருப்பி விடப்பட்டதால் பயணிகள் தவித்தனர்.

பெங்களூரு மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு இடி, மின்னலுடன் கூடிய கனமழை கொட்டியது. சூறாவளி காற்று பலமாக வீசியதால் விமானங்களை இயக்க முடியாத சூழல் ஏற்பட்டது.

பெங்களூரு விமான நிலையத்துக்கு வந்த உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானங்கள் பல மணி நேரமாக வானிலேயே வட்டமடித்தன. எரிபொருள் பற்றாக்குறை மற்றும் பாதுகாப்பு கருதி, அவை சென்னை, ஐதராபாத், கோவை மற்றும் திருச்சி ஆகிய நகரங்களுக்குத் திருப்பி விடப்பட்டன. அதன்படி, அபுதாபி, பாங்காக், மலேசியா போன்ற சர்வதேச நகரங்களில் இருந்தும், டெல்லி, மும்பை, ஜெய்ப்பூர், கொல்கத்தா, புவனேஸ்வர், அகமதாபாத், பாட்னா, அமிர்தசரஸ், ஸ்ரீநகர், ஐதராபாத் போன்ற உள்நாட்டு நகரங்களில் இருந்தும் வந்த 30-க்கும் மேற்பட்ட விமானங்கள் சென்னை விமான நிலையத்தில் ஒன்றன்பின் ஒன்றாகத் தரையிறக்கப்பட்டன.


நள்ளிரவு நேரம் என்பதால் பயணிகள் அனைவரும் விமானத்திலேயே அமர வைக்கப்பட்டனர். அவர்களுக்குத் தேவையான குடிநீர் மற்றும் சிற்றுண்டிகளை அந்தந்த விமான நிறுவனங்கள் வழங்கின.

நள்ளிரவுக்குப் பிறகு பெங்களூருவில் வானிலை சீரானதை அடுத்து, சென்னையில் காத்திருந்த 30 விமானங்களும் மீண்டும் ஒன்றன்பின் ஒன்றாகப் பெங்களூரு நோக்கிப் புறப்பட்டுச் சென்றன. இதனால், சென்னை விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு பரபரப்பு ஏற்பட்டது.

## கற்பக விருக்ஷ வாகனம் புறப்பாடு



திருப்பதி ஸ்ரீ கோதண்டராமர் பிரமோற்சவம் நான்காம் திருநாள் காலை கற்பக விருக்ஷ வாகனம் புறப்பாடு.



சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் திருக்கோஷ்டியூர். ஸ்ரீ சௌமிய நாராயண பெருமாள் திருக்கோவில் யுகாதி உற்சவ புறப்பாடு.

## மானாமதுரை ஆதி முத்து மாரியம்மன் கோவில் பூக்குழி இறங்கும் விழாவில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் பூக்குழி இறங்கி வேண்டுதல்





**மானாமதுரை, மார்ச்.21:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ரயில் நிலையம் அருகே உள்ள ஆதி முத்துமாரியம்மன் கோவிலில் வருடம் தோறும் பங்குனி மாதம் பூக்குழி இறங்கும் விழா நடைபெறுவது வழக்கமாக உள்ளது. இந்த ஆண்டிற்கான விழா கடந்த மார்ச் மாதம் 3ம் தேதி காப்பு கட்டுதலுடன் துவங்கியது.

இதனைத் தொடர்ந்து தினம் தோறும் அம்மனுக்கு அபிஷேக, ஆராதனை, பூஜைகள் நடைபெற்று வந்தன.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான பூக்குழி இறங்கும் விழாவிற்காக நூற்றுக்கணக்கான பக்தர்கள் மானாமதுரை வைகை ஆற்றிற்கு சென்று அங்கு பால்குடங்கள், காவடிகள் எடுத்து அலகு குத்தி நகரின் முக்கிய வீதிகளின் வழியே வலம் வந்து கோயிலுக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த பூக்குழியில் இறங்கி தங்களது வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து அம்மனுக்கு சிறப்பு அபிஷேக, ஆராதனை, அலங்காரம் செய்யப்பட்டு பூஜைகள், அன்னதானம் நடைபெற்றது. விழாவிற்கான ஏற்பாடுகளை கோயில் நிர்வாகி இருளாயி அம்மாள், பூசாரி மூர்த்தி மற்றும் பக்தர்கள் செய்திருந்தனர்.

## சட்டப்பேரவைத் தேர்தலில் தங்களுக்கு சாதகமான 6 தொகுதிகள் அடங்கிய பட்டியலை அளித்தது மனிதநேய மக்கள் கட்சி

**சென்னை, மார்ச்.21:** சட்டப்பேரவைத் தேர்தலில் தங்களுக்கு சாதகமான 6 தொகுதிகள் அடங்கிய பட்டியலை திமுக பேச்சுவார்த்தை குழுவிடம் மனிதநேய மக்கள் கட்சி அளித்தது. பாபநாசம், இராமநாதபுரம், திருவாடனை ஆம்பூர், பாளையங்கோட்டை, நாகப்பட்டினம் ஆகிய 6 தொகுதிகளில் இரண்டை ஒதுக்கீடு செய்ய கோரிக்கை வைத்துள்ளார்.

# ரமலான் சஹர் உணவு வழங்குதல்




திருவண்ணாமலை மாவட்டம் போளூர் கித்மத்துஸ் ஸாகமீன் சஹர் கமிட்டியின் சார்பில் கடந்த 21 வருடங்களாக இந்த சேவையாற்றி வருகிறார்கள் இந்த சேவையின் ஒரு பகுதியாக இந்த வருடம் 2026 தலைவர் ஷபியுல்லா தலைமையில் ரமலான் பிறை தென்பட்ட முதல் நாள் முதல் தினம் அதிகாலை 3 மணி முதல் நோன்பு இருப்போருக்கு அறுசுவை சஹர் உணவு வழங்கப்படுகிறது இந்த சஹர் உணவு நேரத்தில் அமீன் பாஷா,( அல்தாப் வாட்டர்) பத்தாவுல்லா, (ஷஃப்புர் ரஹமான்),முகமது அலி ,சாதிக் , உசேன் , (மளிகை மன்சூர் ) (ஜம் ஜம் நூர்தீன் ) முபாரக் , (REA பாஷா) (சேலஞ்ச் சாதிக்) ஆரிப் ,ஆசிப், (வெற்றிலை நூர்) அஸ்கர் பாஷா அப்துல் ஹமீத், அப்துல் சுபஹான், அயூப் பாஷா, அக்பர் அலி மற்றும் பல முஸ்லிம் இளைஞர்கள் பெரியோர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டு இந்த வருடம் 2026 ரமலான் சஹர் உணவளிப்பு நேரத்தில் மக்களுக்காக சேவை ஆற்றினார்கள்.

# கோவில்பட்டியில் 'தேடல்' புத்தகத் திறனாய்வு விழா



**கோவில்பட்டி, மார்ச்.21:** கோவில்பட்டியில் 'இலக்கியச் சாரல்' மற்றும் 'சகாராவைத் தாண்டாத ஒட்டகம்' கல்வி நிறுவனம் சார்பில், இராஜேஷ் சங்கரப்பிள்ளை எழுதிய 'தேடல்' புத்தகத்தின் திறனாய்வு விழா சிறப்பாக நடந்தது. கோவில்பட்டி நாடார் காமராஜ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி அருகில் உள்ள தியான பயிற்சி அரங்கில் நடைபெற்ற இந்த விழாவிற்கு, நல்லாசிரியர் ப. ஜான் கணேஷ் தலைமை தாங்கினார். விஸ்வாஸ் கல்வி அறக்கட்டளை நிறுவனர் 'ஞான ஒளிமலர்' இந்திராணி அம்மா மற்றும் எஸ்.எஸ்.டி.எம் கல்லூரி முதல்வர் முனைவர் ஆர். செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கோவில்பட்டி இசை எப்.எம்.இயக்குநர், மேனாள் வேளாண்கல்வி ஆசிரியர் கோ. சுரேஷ்குமார் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். புத்தகத் திறனாய்வு விழாவில் நூலினைப் பற்றிப் பின்வரும் இலக்கிய ஆளுமைகள் விரிவான திறனாய்வு செய்தனர், முனைவர் முருக சரஸ்வதி இராதா (தமிழாசிரியர்) முனைவர் கி. பிரபு (முதல்வர்) நல்லாசிரியர் ராஜசேகர் (தமிழாசிரியர்)

கவிஞர் ஜெ. பார்த்திபன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். நிகழ்ச்சியின் இறுதியில், 'தேடல்' புத்தகத்தின் ஆசிரியர் இராஜேஷ் சங்கரப்பிள்ளை ஏற்புரையாற்றினார்.

வரகவி நல்லாசிரியர் மா. முருகேசன் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் கழுகு மலை திருவள்ளுவர் கழகத் தலைவர் பொன்ராஜ்பாண்டியன், செயலாளர் முருகன், கோவில்பட்டி கம்பன் கழகச் செயலர் சரவணச் செல்வன், தலைவர் முத்துப் பாண்டியன், சிறார் கலை இலக்கிய சங்க செயலாளர் மணிமொழி நங்கை, பொருளாளர் கண்ணகி, கவிஞர் போத்திராஜ், எழுத்தாளர் இராஜ லட்சுமி, திருவள்ளுவர் மன்றத்துணைத் தலைவர் திருமலை முத்துச்சாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# இளையான்குடி அரசு மருத்துவமனையில் மகளிர் தின விழா







சிவகங்கை மாவட்டம் இளையான்குடி அரசு மருத்துவமனையில் மகளிர் தினம் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக இளையான்குடி சமூக ஆர்வலர் கலந்து கொண்டு அனைவருக்கும் வாழ்த்துக்கள் தெரிவித்து இனிப்புகள் மரக்கன்றுகள் மஞ்சப்பை வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தார்.




## "அதிமுகவை எதிர்க்க இயலாமல் 'டெல்லி அணி' என திசை திருப்புகிறார் முதல்வர்" - டிடிவி தினகரன்



**சென்னை, மார்ச்.21:** "அதிமுகவை எதிர்க்க தைரியம் இல்லாமல், 'டெல்லி அணி' என்று திசை திருப்பப் பார்க்கிறார் முதல்வர் ஸ்டாலின்," என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் கூறியுள்ளார்.

நடைபெறவுள்ள தமிழக சட்டப்பேரவையில் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் அதிமுக தலைமையிலான என்டிஏ கூட்டணியில் இடம் பெற்றுள்ளது. சட்டப்பேரவை தேர்தல் தேதி அறிவிப்புக்கு பிறகு நேற்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி டெல்லி சென்றுவந்த நிலையில் இன்று டிடிவி தினகரன் டெல்லி செல்ல சென்னை விமான நிலையம் வந்தார்.

முன்னதாக செய்தியாளர்களை சந்தித்த அவர், "அதிமுக தலைமையிலான தே.ஜ.கூட்டணி தமிழக சட்டப்பேரவையில் போட்டியிட இருக்கிறது. இக்கூட்டணியில் பாஜக அங்கம் வகிக்கின்றது, நாங்கள் அவர்களுடன் கூட்டணியில் இருக்கின்றோம் (அமமுக). எனவே அந்த கூட்டணியில் உள்ள பாஜகவின் டெல்லி தலைமை எங்களிடம் பேச்சுவார்த்தை நடத்துகிறது.

இந்த சந்திப்பு நான்கு நாட்களுக்கு முன்பாக கிடைக்கப்பெற்ற அழைப்பை பொருத்தே நடக்கிறது. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை பொருத்தவரை, இது அதிமுக தலைமையிலான என்டிஏ கூட்டணி மட்டுமே. இதனை ஊடகங்கள் வாயிலாக முதல்வருக்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன்." என்றார்.

மத்திய அரசிடம் நிதியை பெற்றுத் தர வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் கோரிக்கை குறித்து பேசிய தினகரன், "தேர்தல் அறிவிப்புக்கு பிறகு மத்திய அரசிடம் எப்படி நிதியை பெற்றுத் தர முடியும் ?.

கடந்த 5 ஆண்டுகளில் மத்திய அரசிடம் இருந்து கிடைத்த நிதியை திமுக எப்படி சுரண்டியது என்பது மக்களுக்கு நன்றாக தெரியும். திமுகவை அகற்ற வேண்டும் என்று வாக்குப்பதிவு நாளுக்காக தமிழக மக்கள் காத்துகொண்டு இருக்கின்றனர்.

அதிமுகவை எதிர்க்க தைரியம் இல்லாமல், 'டெல்லி அணி' என்று திசை திருப்பப் பார்க்கிறார் முதல்வர். இவர்கள் மத்தியில் அத்தனை ஆண்டு காலம் இருந்தும் தமிழக மக்களுக்கு என்று என்ன செய்தார்கள். நீட் தேர்வை கொண்டு வந்தது திமுக, இலங்கை தமிழர்களை கொன்று குவிக்கும் போது மத்தியில் அங்கம் வகித்து வாய்மூடி மவுனம் காத்துவிட்டு, என்டிஏ கூட்டணி குறித்து பேச திமுகவினருக்கு தகுதி இல்லை." என்று டிடிவி தினகரன் கூறினார்.

## "கூவிக் கூவி அழைத்தும் தவெகவுடன் கூட்டணிக்கு யாரும் வரவில்லை" - அமைச்சர் சேகர்பாபு



**சென்னை, மார்ச்.21:** "கூவிக் கூவி அழைத்தும் அவர்களுடன் (தவெக) கூட்டணிக்கு யாரும் வரவில்லை" என அமைச்சர் சேகர்பாபு விமர்சனம் செய்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "மக்கள் பணிகளை மையப்படுத்தி மட்டுமே தேர்தல் களத்தில் இருக்கிறோம். பேய், பிசாசு, பூச்சாண்டிகளுக்கு எல்லாம் பயப்படும் இயக்கம் திமுக அல்ல. மக்கள் சக்தி யார் பின்னால் இருக்கிறது என மே 4-ம் தேதி தான் தெரியவரும். 60 ஆண்டுகால உழைப்பு , முதல்வர் ஸ்டாலின் ஆற்றியுள்ள மக்கள் நலப் பணிகளுக்கு வர இருக்கும் தேர்தலில் முடிவு தெரியும்.

கூவிக் கூவி அழைத்தும் தவெகவுடன் கூட்டணிக்கு யாரும் வரவில்லை; ஆனால் முதல்வர் ஸ்டாலின் அனைவரையும் அரவணைத்துச் செல்பவர். திமுக கூட்டணி வலுவானது. 234 தொகுதிகளிலும் திமுக கூட்டணி வெற்றி பெறும். சென்னையை ஒட்டியுள்ள தொகுதிகளில் கடந்த முறையை விட அதிகமாக வெற்றி கொள்வோம்." இவ்வாறு சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

## என்டிஏ கூட்டணியில் தொடரும் குழப்பம் - 2 தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் செய்த ரங்கசாமி

**புதுச்சேரி, மார்ச்.21:** என்டிஏ கூட்டணி உறுதிப்படுத்தப்படாத சூழலில் முதல்வர் ரங்கசாமி இன்று பிற்பகல் இரண்டு தொகுதிகளில் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தார்.

புதுவை சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 9ம் தேதி நடைபெற இருக்கிறது. தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் கடந்த 16ம் தேதி தொடங்கியது. எனினும், கூட்டணிகள் முடிவாகாததால், கட்சி சார்பில் வேட்பு மனு தாக்கல் அதிகளவில் நடைபெறவில்லை.

என்டிஏ கூட்டணியிலுள்ள என்.ஆர்.காங்கிரஸ் - பாஜக இடையே தொகுதி பங்கீடு முடிந்து என்.ஆர். காங்கிரஸுக்கு 16 தொகுதிகளும், பாஜக 10, கூட்டணிக் கட்சிகளான அதிமுக, லட்சிய ஜனநாயக கட்சிக்கு தலா இரு தொகுதிகள் என முடிவானது. ஆனால் லாட்டரி அதிபர் ஜோஸ் சார்லஸ் மார்டினின் லஜக-வை கூட்டணியில் வைத்திருக்க ரங்கசாமி விரும்பவில்லை. லஜகவை வெளியேற்றக் கோரினார். இதையடுத்து பாஜக தரப்பில் பேச்சுவார்த்தைக்கு முன்வந்தும் அதை புறக்கணித்து கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்தினார்.

இந்நிலையில் டெல்லியில் இருந்து நேற்று மத்திய அமைச்சரும் தேர்தல் பொறுப்பாளரான மான்சுக் மாண்டவியா புதுச்சேரிக்கு தனி விமானத்தில் வந்தபோது, ரங்கசாமி மதுரை, திருச்செந்தூருக்கு சாமி தரிசனம் செய்ய புறப்பட்டார். இதையடுத்து நேற்றும் இன்றும் என இரு நாட்களாக நட்சத்திர விடுதியில் மன்சுக் மாண்டவியா காத்துள்ளார்.

இச்சூழலில் கோயில் தரிசனம் முடித்து இன்று நண்பகலில் புதுச்சேரி திரும்பிய ரங்கசாமி, தனது கட்சியில் முக்கிய நபர்களுக்கு வேட்பு மனு படிவங்களை வழங்கினார். தொடர்ந்து தான் போட்டியிடவுள்ள மங்கலம், தட்டாஞ்சாவடி தொகுதிகளுக்கான வேட்பு மனு படிவங்களை கதிர்காமம் முருகன் கோயில், தனது வீட்டு வளாகத்தில் உள்ள சற்குரு அப்பா பைத்தியம் சாமி கோயில் ஆகியவற்றில் வைத்து வழிபாடு செய்தார்.

பின்னர் மங்கலம் தொகுதிக்கு கோரிமேடு ஆதி திராவிடர் நலத்துறை அலுவலகத்திலும், தட்டாஞ்சாவடி தொகுதிக்கு சாரம் நில அளவை துறை அலுவலகத்திலும் ரங்சாமி தனது வேட்பு மனுக்களை தாக்கல் செய்தார். என்டிஏ பேச்சுவார்த்தைக்காக மத்திய அமைச்சர் காத்திருக்கும் சூழலில் தனது வேட்பு மனுக்களை ரங்கசாமி தாக்கல் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com